Registered No. M. 1229,

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௨. } பிங்கள ஹூ மார்கழி மீ
1917 ஹூ டிசம்பர் மீ { பகுதி ௧௧.

பொருளடக்கம்.

புதல்வர் கடமை:—	பத்திராதிபர்	322
கதாமஞ்சரி:—	M. M. நாராயணசாமிஐயர்	325
வள்ளுவர் நேரிசை:—	அரசஞ் சண்முகனார்	327
விநோதக்கூற்று:—	மிருத்—வைத்தி	328
சாணக்கிய ஸாஹஸம்:—	வி. பாலம்மாள்	329
மாண்டகு வாழ்த்து:	சற்குருதாசன்	334
வாழ்த்துக் கவி:—	E. S. கண்ணபிரான்பிள்ளை	335
மௌனதேசிகர்:—	ம. கோபாலகிருஷ்ணையர்	336
விடுகதை வினாவுக்கு விடை.—	பலர்	345
ஆத்திசூடி வெண்பாவைப் பற்றிய ஐயந் தெளிவுரை	க. மீனம்பாள்	346
மகுடாபிஷேகப் பஞ்சரத்னம்:—	ஏ. சிவசூரியன்பிள்ளை	350
மைற்கல்:—	A. R. ஸ்ரீநிவாஸமுதலியார்	350
புத்தக மதிப்புரை:—	பத்திராதிபர்	352
ஓர் வேண்டுகோள்:—	பத்திராதிபர்	353
சமாசாரக் கொத்து:—	ஷை	354
இனாம்! இனாம்!! இனாம்!!!	மானேஜர்	356
விளம்பரங்கள்:—	ஷை	356

சொந்தக்காரர்:— ம. கோபாலகிருஷ்ணையர்.

ம. கோபாலகிருஷ்ணையர் }
வி. பாலம்மாள் } பத்திராதிபர்.

விவேகோதயம் அச்சுயந்திரசாலை, மதுரை.

வருஷ சந்தா ரூ 2-0-0.] 1917 [தனிப் பிரதி அணா 3.

வெளிநாடுகளுக்கு ரூ 2—4—0

குறிப்பு.—இதிலடங்கிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி
எவரும் பிரசுரிக்கக் கூடாது.

பட்டுப் பீதாம்பரக் கம்பெனி.

திருப்தியில்லாதன்தத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் } **ஸ்ரீகாசி** { பட்டுப் பீதாம்பர. சீயாட்லாக்இுமாய் அனுப்பப்படும்

உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள் பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக் கண்டிகள் 33 உள்ளது கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1-க்கு அணா 10முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும்.சம்மதமில்லாதவை திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்

வெண்பட்டு வேஷ்டிகள்

சுத்தமான வெண் பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி: ஸன்ன் கம்பி ருத்திராக்ஷக் கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை

4	முழம்	2	அகலம்	1-க்கு	ரூபா	4-8	முதல்	7		வரை.
6	,,	2½	,,	1-க்கு	,,	7	,,	9		,,
6	,,	3	,,	1-க்கு	,,	10	,,	12		,,
7	,,	2½	,,	1-க்கு	,,	8	,,	12		,,
7	,,	3	,,	1-க்கு	,,	10	,,	14		,,
8	,,	3	,,	1-க்கு	,,	12	,,	18		,,
9	,,	5	,,	1-க்கு	,,	14	,,	20		,,
10	,,	4	,,	1-க்கு	,,	15	,,	22		,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமாக சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்யப்பட்ட உறுதியும், நைஸும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6முழநீளம் 3 முழ அகலம் சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—8—0. டை சிறிது 1-க்கு ரூபா 4—8—0 மேக வர்ணப்போர்வை 1-க்கு ரூபா 6—8—0 தபால்செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல்நெம்பர் 100-க்கு	...	...	3—0—0.
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0—6—0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2. பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள் விலாசம்:— மானேஜர்,

பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, தாராநகர்தெரு, காசி.

anager, Silk Petamber Co, Dharanagar St, Benares City.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று

வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—*திருக்குறள்.*

தொகுதி உ.	பிங்கள௵ மார்கழி௴ 1917௵ டிசம்பர்௴	பகுதி கக.

புதல்வர் கடமை.

(295-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

' "கடமை முரண்" நிகழுங்கால், பெற்றோர்க்குக் கீழ்ப்படிய விர்வித்து, அவர்கட்கு உரிய மரியாதை செய்யவாவது முடியாவிடினும், அவர்களிடத்துள்ள மெய்யன்பு உத்தம புத்திரர்க்கு ஒருபோதும் மாறாது' என்பதற்கு, விசுவநாதநாயகனை ஓர் சான்றாகக் குறித்தோம். மற்றும் இரண்டொரு உதாரணம் கூறி, இவ் விஷயத்தை நிறுத்தி மேற்செல்வோம்.

பிரகலாதனுக்குத் தன்னை யீன்ற பரம துஷ்டனாகிய இரணியனிடத்திருந்த பேரன்பையும் எண்ணிப் பாருங்கள்! தெய்வ நிந்தனை செய்யவும், தன்னையே தெய்வமாகப் பாவித்துத் துதித்து வணங்கவும், இரணியன் கட்டளையிட்டதின் நிமித்தம் அவனுக்கும் பிரகலாதனுக்கும் நிகழ்ந்த தர்க்கங்களும், அவை காரணமாகப் பிரகலாதன் உற்ற பல்வேறு பயங்கர தண்டனைகளும் நமது விவேகோதயம் முதற் றொகுதி 9-ஆம் பகுதியில், 252; 253-ஆம் பக்கங்கள் வாசித்தோர் மனதிற் பதிந்திருக்கும். தனது தந்தையால், வேறு எவனேனும் அத்தகைய தண்டனைக்குள்ளாகி யிருப்பின், அங்ஙனம் உள்ளாகியவற்கு, தந்தைமீது எவ்வளவு வெறுப்பும் விரோதமும் இருந்திருக்கும்! தந்தையின் மரணத்திற்கே தான் காரணனாக நேர்ந்த காலத்தும், பிரகலாதன், பிறவியினால் ஏற்பட்ட தன் கடமையைத் தந்தை விஷயமாகச் செலுத்துவதிற் சிறிதேனும் தவறினனா?: பிரகலாதனது வாக்கை மெய்ப்பிக்குமாறு, அவன் தந்தை இகழ்ந்துரைத்த அதே தூணினின்றும் நரசிங்க வடிவுடன் தோன்றிய பக

வான், இரணியனை மாய்த்ததும், அவனது மகனை நோக்கி ''பக்த! நீ வேண்டும் வரம் யாது?'' என, அவன், கண்ணும் கண்ணீருமாய்,

''மறைமுடி நடஞ்செய்(து) அன்பர் சிந்தையில் வாழ்
மாதவ! மாயவ! 'தானே
இறைவன்' என்றெண்ணித் தருக்கி ஏமாந்தெம்
இறைவ! நின்னையும் இகழ் எந்தை
முறையில்வன் செய்கை முழுவதும் பொறுத்து
முத்தியிந் தவற்கருள் புரிவாய்
கறையிலங் கியநீள் முத்தலைச் சூலக்
கைப்பெருமா(ன்) நிகர் சினத்தாய்!''

என்றன்றோ வேண்டினன்? அவன் சிறிதேனும் தன் தந்தை தனக்கியற்றிய கொடுமைகள் ஒன்றையாவது அற்பமும் நினைத்தானா!

அற நூல்களில் மறச் செயல்களாக விலக்கப் பட்ட பலவுள்ளும் மாதுர் ஹத்தி, பிதுர் ஹத்தி, குருஹத்தி, பிரமஹத்தி முதலிய தீச்செயல்கள் எவ்வளவு கொடும் பாதகங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன! அவை செய்வோர்க்கு விதிக்கப்பட்டுள்ள ராஜ தண்டனையும் தெய்வ தண்டனையும் எவ்வளவு! ''கடமை முரண்'' நேர்ந்த காலத்தில், இப்படு பாதகச் செயல்களிற் சில, மனநேர்மையடைத்த சான்றோர் புரிந்து தீரவும் நேரும். அங்ஙனம் புரிவோர்க்கு, பழி பாவம் ஏதும் சாராது. இப்பொழுது நாம் செல்லப்புகும் விஷயத்தை நன்கு கவனியுங்கள்: பிரகலாதனாவது, தந்தையைத் தான் கொல்லாது, அவனது மரணத்திற்கு, (மனமேயின்றி,) ஒருவிதத்திற் காரணனாயினன்: தானே தாய்க்கொலை புரிந்தான் பரசுராமன். அவன் அது செய்த விவரமும், அது காரணமாக அவன் மீளா நரகுக்காளாகாமையும், நமது பத்திரிகையின் முதற் தொகுதி 212,213-ஆம் பக்கங்கள் படித்தோர் நன்கறிவர்.

மாதுர்ஹத்தி ஒழிந்த, ஏனைய பிதுர் ஹத்தி, குருஹத்தி, பிரமஹத்தி ஆகிய மூன்றும் ஏககாலத்திற் புரிந்தும், அவற்றினால் ஒரு சிறிதும் பாதிக்கப் படாத உத்தமோத்தமராகிய விசார சருமரது விருத்தாந்தத்தையும் விளம்பக் கேண்மின்:

திருச் சேய்ஞலூரிலே, வேதியர் குலத்திற் றோன்றிய எச்சதத்தனுக்கும், அவனது நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியான பவித்திரைக்கும் திருக் குமாரராக அவதரித்தவர் விசாரசர்மர். இயற்கையிலேயே நல்லறிவு மிக்க இவ்வந்தணச் சிறுவர், தம் தந்தையை மாப்பெருங் குரவனாகக் கொண்டு, வேதசாஸ்திரங்கள் யாவையும் கற்று, சிவபக்தியிற் சிறந்து விளங்கினர். கருணையோர் உருவாய் வந்த இக்கான்முளை, ஒருநாள், இடையனொருவன் ஒரு பசுவைச்-

சிறிதும் இரக்கமின்றி அடித்து ஓட்டிச் செல்வதைக் கண்டு வருந்தி, தாமே பசுமந்தையை மேய்த்துவர அவனிடம் அநுமதி கேட்டனர். சோம்பேறி இடையன் அதிமகிழ்வுற்று அவரது வேண்டுகோட்கிணங்கினன். அன்று முதல், நாள்தோறும் விசாரசர்மரே இடையனுக்குப் பதில், பசுமந்தையை மேய்த்து வரலாயினர். இச்சிறுவர் காட்டிய அன்பாலும், ஊட்டிய இரையாலும், பசுக்கள் அளவுக்கு மிஞ்சிப் பால் அளித்தன. தத்தம் கன்றுகட்கும், தம்மை ஆதரிப்போர்க்கும் முன்னிலும் அதிகமாகப் பால் கொடுத்தும், பசுக்கள், தம் மடி தாங்காது பாலைச் சுரந்து கீழே வழியவிட்டு வந்தன. சிறுவர் இதுகண்டு, மாடுகள் மேய்ந்து கொண்டிருந்த மண்ணியாற்றங்கரையிலுள்ள ஒரு மணல்திட்டையில், ஓர் ஆத்தி மரத்தின்கீழ், மணலினால் ஒரு சிவலிங்கம் செய்து வைத்து, அதனைச் சுற்றிலும் கோவிலும் கோபுரமும் மதிலும் பிறவும் மணல் கொண்டே வகுத்தனர். பிறகு, பக்க நந்தவனத்திலிருந்து சிவார்ச்சனைக்குரிய மலரும் தளிருங்கொண்டு, அச்சிவலிங்கத்தை அர்ச்சித்து, வீணாகக் கீழ்வழிய இருக்கும் பாலைக் கறந்து, அது கொண்டு ஸ்வாமிக்குத் தினந்தோறும் அபிஷேகம் செய்து வந்தார். இவரது அந்தரங்கத்தை அறியாத எச்சதத்தன், ஒருநாள் இதைக் கண்டு, பாலை அவர் வீணாக்குவதாகக் கருதிக் கடுங்கோபங் கொண்டு, அவரது முதுகில் வலியப் புடைத்துக் கொடுஞ்சொற்கள் பலகூறி, இரைந்தான். சிவத்தியானத்தில் இருந்த மகன், தம் உடம்புக்கு உபாதியை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. மறுபடியும் திருமஞ்சன அபிஷேகம் செய்ய ஆரம்பித்தனர். உடனே எச்சதத்தன், முன்னிலும் வெகுண்டு, திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலால் இடறி, லிங்கத்தையும் கலைத்தான். கரைகடந்த சிவபக்தி மிக்க அச்சிறுவர்க்கு, அடங்காக் கோபம் அப்போதுதான் பிறந்தது. பிறக்கவும், விசாரசருமர் எச்சதத்தன் தமக்குத் தந்தையும் குருவும் அந்தணனுமாயிருந்தும், தமது பரம பிதாவும், பரம குருவும், வேதியர் வேதியனுமான சிவபிரானுக்குச் செய்த அபராதம் ஒன்றையே உன்னி, அருகிலிருந்த ஒரு கோலை எடுத்து, (தக்ஷணமே தெய்விகமாய் ஓர் மழுவாக மாறிய) அதனைக்கொண்டு அவனது இருகால்களையும் வெட்டி வீழ்த்தினர். சிவபிரான் அவரது பக்திக்கு மெச்சி, பிரத்யக்ஷமாகி, விசாரசர்மரை நோக்கி "மதலாய்! நீ நம்பொருட்டு நின்னையீன்ற தந்தையை வெட்டினை. வருந்துகலொழிக. இனி உனக்கு நாமே உரிய தந்தை," என்று கூறி, அவருக்குத் தமது ஸாரூப்ய பதவியாகிய சண்டேசுர பதம் அளித்தனர்.

அன்பர்களே! ஈசுவர பூஜையினும் மிக்க புண்ணியமும், ஈசுவராபராதத்தினும் மிக்க பாவமும் ஏது? இத்தகைய பூஜைக்கு, எச்சதத்தன் இடையூறு செய்தது, ஈசுவராபராதமன்றோ? பரமனிடத்துக் கொண்ட பக்திப் பெருங்காதலால், அப் பரமன் நிமித்தமே எச்சதத்

தனை அவனது குமாரர் கண்டித்தனரே யன்றி, அவன் தம்மைத் தாங்கொணாத் துன்பத்திற்குள் ளாக்கியபோது வாயைத் திறந்தாரா பாருங்கள்!. தம்செயலற்று, ஈசுவராதீனமாய் நிற்போர் செய்வது, அதி பாதகச் செயலாக அறியாதார்க்குத் தோன்றினாலும், இறைவன், அதனைத் தமது பணியாகவே கொள்ளல் இயல்பு. விசாரசர்மர் பற்பல தோஷங்கட்குள்ளாகாமல் உயர்கதி யுற்றமைக்குக் காரணம் இதுவே என்க. "எச்சதத்தன் சிவத்துரோகம் செய்தும், விசாரசர்மரால் இம்மையிலேயே அதன் நிமித்தம் தண்டிக்கப்பட்டு விட்டதால், அக் குற்றம் நீக்கி மறுமையிற் சிவபதவி யுற்றான்" என்று ஆன்றோர் கூறுதலைக் கொண்டும்,

"வந்தமண லால்இலிங்கம் மண்ணியின்கண் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமம் தேர்ந்துசிதைப் பான்வரும்அத்
தந்தைதனைச் சாடுதலும் "சண்டீசன்" என்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலிஎம் பெருமானே"

எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், விசாரசர்மர்க்குச் சிவபெருமான் உயர்கதி யளித்ததைத் பாராட்டித் துதித்திருத்தலைக் கொண்டும், நம்சிறுவர் வசைக்கேனும், தீவினைப் பயனுக்கேனும ஆளாகியவரில்லை எனத் துணிந் துரைக்கலாமன்றோ?. நிற்க.

"பாதகமே யென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாள்இரண்டும்—சேதி"த்தும்

அச்சற்புத்திரர்க்கு இருவினைப் பயனும் இல்லா தொழிந்ததற்குக் காரணம், எமது நல்லாசிரியரும், பொன்னூப் புகழுடம்பு படைத்த புலமை மிக்கோருமான சோழவந்தானூர் ஸ்ரீமத் அரசஞ்சண்முகனாரவர்கள், தாம், தமது அந்திய காலத்தில் எழுதத் தொடங்கிய "வள்ளுவர் நேரிசை"யில்,

"தந்தையார் தாள்எறிந்தும் சாராமை என்னே வினை
மைந்தர் ஒருவர்க்கு? வள்ளுவரே!—நந்தும்
இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்ற வெண்பாவில், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதையும் ஞாபகப் படுத்துகிறோம்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

கதாமஞ்சரி.

உஜ்ஜயினி நகரத்தில் புண்யஸேனன் என்று ஒரு அரசனிருந்தான். அவனுக்குநற்குணங்கள் நிறைந்த ஹரிஸ்வாமி யென்ற பிராமணனொருவன் மந்திரியா யிருந்தான். அவனுக்கு தேவஸ்வாமி யென்ற புத்திரனும், ஸர்வாங்க சுந்தரியான ஸோமப்ரபை என்ற பெண்ணும் பிறந்தார்கள். அப்பெண்ணுக்குப் பன்னிரண்டு வயதானதும், அவள் தன் தாயிடம், "என்னைச் சூரனுக்காவது ஞானிக்காவது விக்ஞானிக்காவது கொடுக்கவேண்டும். மற்றவருக்குக் கொடுத்தால் உயிர் விடுவேன்" என்று தெரிவித்தாள். தந்தை இவ்விஷயத்தைக் கேட்டுப் பெரிதும் கலங்கினான். இதற்கிடையில் அவன் புண்யஸேன ராஜனால் ராஜகாரிய நிமித்தம் தென் தேசத்திற்கு அனுப்பப்பட்டான். ஹரிஸ்வாமி தன் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்புகையில் அவனது பெண்ணின் கருத்தையறிந்த ஒரு பிராமணன், அவனிடம் வந்து, தனக்கு அவளைக்கொடுக்கும்படி கேட்டான். அதற்கு அவன் தன் பெண் கூறிய மூவருள் ஒருவனாயிருந்தால் தருவதாக ஒத்துக் கொண்டான். பிராமணன் தான் 'விக்ஞானி' என்று சொல்ல, ஹரிஸ்வாமி, 'உன் சாமர்த்தியத்தைக் காட்டு' என்றான். உடனே விகஞானி, தனது வல்லமையினால் ஆகாயத்திற் செல்லும் தேரொன்றை உண்டுபண்ணி அதில் அவனை ஏற்றிவைத்து, ஸ்வர்க்கம் முதலிய உலகங்களைக் காட்டிவிட்டு முன்னிருந்த விடத்தில் கொண்டுவந்து இறக்கினான். ஹரிஸ்வாமி மகிழ்ந்து பெண்ணை அவனுக்குக் கொடுப்பதாகவும், ஏழாவது நாளில் விவாகத்தை நடத்துவதாகவும் வாக்களித்தான்.

இஃதிப்படியிருக்க, உஜ்ஜயினியில் வேறொரு பிராமணன் ஹரிஸ்வாமி புதல்வனிடம் வந்து, அவன் தங்கையைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அதற்கு அவன் அவ்ளது விருப்பு இன்னதெனக் கூற, பிராமணன், தான் ஒரு 'சூரன்' என்று சொல்லி அஸ்திர சஸ்திர வித்தைகளில் தனக்கு இருக்கும் வல்லமையைக் காட்டினான். தேவஸ்வாமி மகிழ்ந்து அவனுக்குத் தன் தங்கையைக் கொடுப்பதாகவும், ஏழாவதுநாளில் விவாகத்தை நடத்திவிடுவதாகவும் வாக்களித்தான்.

இதற்கிடையில், ஹரிஸ்வாமியின் மனைவியிடம் ஒருபிராமணன் வந்து, தனக்குப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்க, அவள் மகள் பிரதிக்ஞையை அறிவித்து, "நீயார்?" என்று வினவ, அவன், "நான் ஞானி" என்று சொல்லி, நடந்த விஷயங்களையும், நடக்கப்போகிறதையும்கூறினான். கூறவே, அவள் மகிழ்ந்து அவனுக்குத் தன்மகளை ஒருவாரத்தில் விவாஹஞ்செய்துகொடுப்பதாக வாக்களித்தாள்.

மறுநாள் ஹரிஸ்வாமி தென்தேசத்திலிருந்து வந்து, பெண்ணைப்பற்றிய தனது தீர்மானத்தை மனைவியிடமும் புதல்வனிடமும் தெரிவித்தான். மனைவியும் புதல்வனும், தாம் தனித்தனி வேறாட்களுக்கு வாக்களித்திருந்ததை அவனுக்குத் தெரிவித்தனர். தன்

பெண்ணுக்கு மூன்று வரன்கள் தேடப்பட்டிருப்பதையறிந்து மிகவும் வியாகுலமடைந்தான் ஹரிஸ்வாமி.

ஏழாவதுநாள் வந்ததும், முற்கூறிய மூன்று பிராமணர்களும் ஹரிஸ்வாமியின், வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். ஸோமப்ரபை திடீரென்று காணாமற் போயினள் என்ற செய்தி அவர்கட்கெட்டியது. உடனே ஞானி, 'தூமரசிகன் என்ற ராக்ஷஸன், விந்திய மலையில் ஸோமப்ரபையை வைத்திருக்கிறான்' என்றான். ஹரிஸ்வாமி "இதற்கு என்ன செய்யலாம்" என்று வருந்தும்போது, விஞ்ஞானி, ஆகாயத்திற் செல்லும் தேரொன்று செய்து, அதில் ஹரிஸ்வாமி, ஞானி, சூரன், இவர்களை ஏற்றி விந்தியமலைக்குக் கொண்டுபோய் இறக்கினான். அப்பொழுது ஞானி, ராக்ஷஸனிருப்பிடத்தைக் காட்டினான். உடனே சூரன் ஹரிஸ்வாமியுடன் ராக்ஷஸனிடஞ் சென்று அவனோடு அக்கார யுத்தஞ் செய்தான் சிறிதுநேரத்திற் கெல்லாம் சூரனது கணையினால் ராக்ஷஸன் தலை அறுந்து வீழ்ந்தது. யாவரும் மகிழ்ந்து அங்கிருந்து ஸோமப்ரபையுடன் விஞ்ஞானியின் தேறிலேறி உஜ்ஜயினி வந்து சேர்ந்தனர்.

ஊர்வந்ததும், அப்பெண்ணை யார் பெறுவதென்பதைக் குறித்து அவர்கள் கலகஞ் செய்யத் தொடங்கினர். ஞானி, "நான் ஞானபலத்தினால் இவளிருக்குமிடத்தையறிந்து சொல்லாவிடில் இவளை எவ்வாறு கொண்டுவர முடியும்? ஆகலால், இவளை எனக்கே கொடுக்கவேண்டும்" என்றான். விஞ்ஞானி, "நான் ஆகாயத்திற் செல்லும் தேரை உண்டுபண்ணாவிடில், அற்ப நேரத்திற்குள் தேவதைகளைப் போல அங்கே எவ்வாறு போகமுடியும்? [illegible] தேரில்லாவிடில் ராக்ஷஸனோடு எவ்வாறு யுத்தஞ் செய்ய முடியும்? ஆனதால் இப்பெண்ணை எனக்கே கொடுக்கவேண்டும்" என்றான். சூரன் "நான் இந்த ராக்ஷஸனைப் போர்க்களத்தில் பாணத்தினால் கொல்லாவிடில் உங்களுடைய முயற்சியினால் பெண்ணைக் கொண்டு வரமுடியுமா? ஆனதால் இவளை எனக்கே கொடுக்க வேண்டும்" என்று சொன்னான். ஹரிஸ்வாமி, "இவ்விஷயத்தை அரசனிடஞ்சொல்லி, அவன் சொல்லுகிறபடி செய்வோம்" என்று கூறி, மூவரையும் அழைத்துக்கொண்டு புண்யஸேனனிடஞ் சென்று, நடந்த விஷயங்களைத் தெரிவித்தான். அரசன், ஹரிஸ்வாமியைப் பார்த்து, "நீ உனது பெண்ணைச் சூரனுக்கே கொடுக்கவேண்டும். ஏனெனில், அவனே தனது உயிரையும் லக்ஷ்யஞ்செய்யாமல் அதிசிரமப்பட்டு ராக்ஷஸனைக் கொன்று பெண்ணை மீட்டவன். ஞானியும், விஞ்ஞானியும் தெய்வானுகூலத்தால் இவனுக்குச் சகாயமாக ஏற்பட்டவர்களே," என்றான். அரசன் கூறியபடி சூரனுக்கே அப்பெண் மனைவியாயினள். தம்பதிகள் சுகமாய் வாழ்ந்து வந்தனர்.

எம். எம். நாராயணசாமி ஐயர்.

சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(317-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கல்விதனம் மிக்க கதிரேசனும்வணிகன்
வல்விதனம் எற்கொழித்தான் வள்ளுவரே!—ஒல்வகையாற்
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (௨)

(அ-ம் முதலியன):—கதிரேசன்-மகிபாலன்பட்டி வித்வானும், நாட்டுக் கோட்டை நகர வணிகமக்கள் தமிழ்வளர்ச்சிக்காக ஆங்காங்கு தமிழ்ச் சங்கங்களும் கலாசாலைகளும் ஸ்தாபிப்பதற்கு மூலகாரணருமான ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியார், வல்விதனம்—கடுந்துயரம், எற்கு—எனக்கு, ஒல்வகையால்—இயன்ற விதத்தில், காலத்தினாற்செய்த நன்றி—கஷ்டம் வந்தகாலத்திற் செய்த உபகாரம், மாண—மிக.

☞ ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியார் இந் நூலாசிரியரான ஸ்ரீமத் அரசஞ்சண்முகனாரது வல்விதனம் ஒழித்த வரலாற்று விவரம் அறிந்தவுடன் அறிவிப்போம்.

கோவை, கூழிட்ட அசதிக்கும் கூறினள்
மாவியப்பே ஔவைசெயல் வள்ளுவரே!—தாவாப
பயன்தூக்கார் செய்தஉதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (௩)

(அ-ம் முதலியன):—கோவை—அகப்பொருள் துறைகள் ஒழுங்காக அமையக் கட்டளைக் கலித்துறை நானூறு கொண்ட பிரபந்தம், அசதி—ஓர் இடையன், தாவா—குற்றமற்ற, பயன்—(தாம் செய்யும் உதவியைப் பெறுவோரால் தமக்குப் பின்னர் வரும்) பயனை, தூக்கார்—ஆராய்தலிலராய், உதவி நயன்—உபகாரத்தின் நற்பயன்.

குறிப்பு:—அகப்பொருள்—சிற்றின்பம், கோவை—உவமையாகு பெயர்; ஔவை—பிராயம் முதிர்ந்தவப்பெண். இவள் திருவள்ளுவருடன் பிறந்து சங்ககாலத்தில் இருந்த ஔவைக்குப் பிற்பட்ட காலத்திலிருந்த ஓர் ஔவை என்று புலவர் புராணமுடையோரும் சுப்பிரமணிய ஆசாரி பீ.ஏ-யும் காரணம் காட்டி விளக்கியுள்ளார்கள்.

ஔவை, கூழிட்ட அசதிமீது கோவை பாடியது:—பாண்டிய நாட்டிலுள்ள ஓர் காட்டு வழியே சென்று கொண்டிருந்த ஔவை, பசியொருது வருந்தி, எதிர்ப்பட்ட ஓர் ஆட்டிடையன்பால் உணவு இரந்தனள். அவன் மனம் இரங்கித் தனக்காக வைத்திருந்த கூழை அவட்கீந்து உபசரித்தனன். அவனது அன்பார்ந்த உதவியைப் பாராட்டிய ஔவை அவனைச் சிறப்பிக்க எண்ணி, அவன்மீது ஒரு பிரபந்தம் பாடத் தீர்மானித்து, அவனது பெயரைநூலில் அமைத்திடுமாறு அவனை 'உன் பெயர் யாது?' எனக்

கேட்டனள். தன் பெயர் கூடத் தெரியாத அப்பேதை, "என்னைக் கேக்கறீங்களே. எங்கப்பு என்ன பேரு வச்சிச்சோ! இப்போ அசதிங்க" என்றான். "அசதி" என்பது "மறதி" எனப் பொருள்படும் "அயர்தி" அல்லது "அயர்ச்சி" என்பதன் திரிபு. ஒளவை, "நல்லது, உன் ஊர்ப்பெயராவது தெரியுமா?" என்ன, அதையும் மறந்த அந்தப்பெரும் பேதை "என் ஊரா? என்னமோ சொல்லிக்குவாங்களே! அஞ்சு கருவேளமரம் இருக்கங்கே. அதன் பேரு வரமாட்டேங்குதே" என்று தியங்க, அவள் உடனே அதை உணர்ந்து, "ஐவேலியா உன் ஊர்?" என்ன "ஆமாங்க; ஆமாங்க. அதுதான்" என்றான். பிறகு ஒளவையார் "அசதி" என்பதையே பாட்டுடைத் தலைவனது பெயராகவும் "ஐவேலி" என்பதை அவனது ஊராகவும் அமைத்து, "அசதிக் கோவை" என்ற ஓர் அருமையான பிரபந்தம் பாடி, அப்பிரபந்தத்தைச் சிதம்பரத்தில் அரங்கேற்றி எங்கும் பரவச் செய்தனள்" என்பதே.

(இன்னும் வரும்.)

ம. கோ.

விநோதக் கூற்று.

(1) 'ஓசி'ப் பொடி வாங்கிப் போட்டே காலந்தள்ளி வந்த சங்குவுக்கு ஒருநாள் பொடி கிடைக்கவில்லை. அவனுக்கு அறிமுகமேயில்லாத வேங்கு தெருவிற் போய்க்கொண்டிருந்தான். அவன் ஒரு குறும்பன். இஃதறியாது சாமர்த்தியமாய் அவனிடம் பொடி யாசிக்கக் கருதி,

சங்கு:—ராமண்ணு! ஆத்துலே எல்லாரும் சௌக்கியம் தானே?

வேங்கு:—சௌக்கியந்தான் கோபண்ணு. ஆமா—மாதம் நாலாகியும் வாங்கின பணத்தைத்தர இன்னும் மனம் வல்லியோ. வரங்கற வழியாத்தான் வீரங்கணும் போலிருக்கு.?

சங்கு:—(திடுக்கிட்டு) ஓய்! ஓய்! நான் கோபண்ணு இல்லேஓய். நான் சங்குவுன்னு?

வேங்கு:—என்பெயர் ராமண்ணு இல்லேஓய், நான் வேங்குவுன்னு?

சங்கு:—அப்படியா? கொஞ்சம் பொடி குடுங்க.

வேங்கு:—அடடா? நான் ஒம்மகிட்ட வாங்கிப்போடலாம்னா நெனச்சேன். காசுபோட்டு வாங்கறது இங்கர வழக்கமே எங்கிட்டயில்லெ.

மிருத்யஞ்சயன்.

(2) ஒரு பிச்சைக்காரன் ஒரு வீட்டில் பிச்சை கேட்டான். வீட்டெசமானன், "அம்மா வீட்டில் இல்லை. போ! போ!!" என்றான். அதற்குப் பிச்சைக்காரன் "ஐயா! நான் பிச்சை கேட்டேனே தவிர, அம்மாளைக் கேட்கவில்லையே." என்றான்.

வைத்தியநாதன்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும் சந்திரகுப்த சரித்திரம்.

பதினைந்தாவது அத்தியாயம்.

சாணக்யனது யோசனை.

ஏவலாட்கள் சென்றதும், சாணக்கியன், "நந்தர்களுக்குப் பரம ஆப்தனாகிய ராக்ஷஸன், இப்பொழுது சந்திரகுப்தனிடமுள்ள பயத்தினாலோ; அல்லது அவனிடம் தான் கொண்டுள்ள வைரத்தைச் சாதிப்பதற்கோ, நகரை விட்டுச் சென்றிருக்க வேண்டும். பயத்தினால் ஓடி யிருப்பானாகில், போட்டது போட்டபடி யன்றோ போட்டுவிட்டு ஓட வேண்டும். அங்ஙனம் செய்யாமல் அவன் தனது பெண்டு பிள்ளைகளை மறைத்து வைத்திருப்பதை யோசித்தால், ஏதோ பகை பாராட்டியும், தீர்க்காலோசனையுடனும், தனது எண்ணத்தை முடித்துக் கொள்ளவே சென்றிருப்பான் எனத் தோன்றுகிறது. இவ்விடத்தில் முக்கிய அதிகாரியாக விருந்து அரசாட்சியை அவனே நடத்தி வந்திருக்கிறானாதலால், பேருக்கு அரசர்களாக இருந்த நந்தர்களினும், இவனிடமே சகல பிரஜைகளுக்கும் கௌரவமும் பயமும் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. பழிக்குப் பழிவாங்க அவன் இங்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறானோ தெரியவில்லை. அவன் பகைமேற்கொள்ளாது, "பயந்திருக்கிறேன்" என்று சொல்லி யனுப்புவானாகில், அவனுக்கு முன்னினும் அதிக அதிகாரம் அளிக்கலாம். ஆனால் அவன் இவ்வளவு வைரத்துடனிருக்கும் போது, அவனைக் கட்டாயப்படுத்தி அழைப்பதும் பிசகு. ஜ்வரமுள்ளவனுக்கு அபத்தியத்தினால் உள்ளிருக்கும் தோஷத்தை நாக்குக் காட்டுவது போல, ராக்ஷஸனுடைய கொடிய எண்ணமும் அவனது ஏற்பாடுகளும் அவன் மறைந்திருப்பதாலேயே தெரிகிறது. உண்மை கொஞ்ச நாளிலே வெளிப்படாமல் இராது. அதற்குமேல் தக்கபடி நடத்திக் காரியத்தை முடித்துக் கொள்வோம். நிற்க.

'நந்தர்களைச் சங்கரித்துச் சந்திரகுப்தனுக்கு முடிசூட்டுகிறேன்' என்று நான் செய்த சபதப்படி நந்தர்களை வேருடன் களைந்துவிட்ட

தனாலேயே "சந்திரகுப்தனே இந் நந்த ராஜ்யத்திற்கு அதிபதியாய் விட்டான்" என்று அறிந்து எனது சிகையை அன்றே கட்டி விட்டேன். சந்திரகுப்தனுக்கு நந்த ராஜ்யாபிஷேகம் செய்வித்து "ஸார்வ பௌமன்" என்று மண்டாலாதிபதிகளைக் கொண்டு கப்பம் கட்டும்படி செய்யவேண்டுமானால், 'முந்தி நீர் சொல்லியிருந்த பிரகாரம் பாதி இராச்சியத்தை எனக்களித்து விட்டு, மீதிப் பாதியைச் சந்திரகுப்தனுக்குத் தர வேண்டு' மென்று பர்வதேசன் சொல்வானே! எவ்வித உபாயத்தாலேனும் இப் பர்வதேசனா லுண்டாகும் பெருத்த விக்கினத்தை நிவர்த்தித்துக் கொண்ட பிறகுதான் சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டியிருக்கிறது. தர்மஸ்தாபனத்தின் பொருட்டு நான் தண்ட நீதியை அப்பியசித்து வந்திருப்பது ஸத்யமானால், ஸமீபத்தில் இதற்கோர் வழி ஏற்படாமல் இராது." என்று யோசித்துக் கொண்டே அன்றையப் பொழுதைப் போக்கினான்.

பதினாறுவது அத்தியாயம்.
சந்திரகுப்தனது திருவோலக்கம்.

மறுநாள் சந்திரகுப்தனுக்கு ஞாதி சூதகம் நிவர்த்தியாய் சுத்த ஸ்நானம் செய்ததும், சாணக்யன் நந்தர்களின் பொக்கிஷத்திலிருந்து, திவ்ய வஸ்திராபரணங்களையும் முத்து ஹாரங்களையும் வரவழைத்துச் சந்திரகுப்தனை அலங்கரித்துப் புஷ்பம் சந்தனம் தாம்பூல *மிவைகளை யணியச்செய்து, ராஜசபை கூட்டி ஸ்வர்ண பீடத்தி லுட்காரச்செய்து, அருகிலிருந்த வேலையாட்களை நோக்கி, "பத்ரபடன் முதலிய சேனாபதிகள் தங்கள் சேனைகளுடன் வந்தனம் செய்யவருகிறோம்" என்று சொல்லி யனுப்பிய வண்ணம் இது வரை வரவில்லை. சேனைகளை ஒன்று சேர்த்தாயிற்றோ, இல்லையோ அதுவும் தெரிய வில்லை. இப்பொழுது சித்தமாயிருக்கும் ஸைன்யங்களுடன் முன்வந்தவர்களே வந்து அரசனை வந்தித்துச் செல்லட்டும்" என்று ஆக்ஞாபித்தான்.

உடனே அத் தூதர்கள் ஓட்டமாக ஓடி, சேனாபதிகளைக் கண்டு "புறப்படுங்கள் புறப்படுங்கள்" அரசர் சபையிலிருக்கிறார். உத்தர

வாயிருக்கிறது. சீக்கிரம் புறப்படுங்கள். என்று மொழிந்தனர். மொழியவும் அவ் வதிகாரிகளும் மற்றுமுள்ள சிற்றரசர்களும் ராஜ சபைவந்து தமது சேனைகளுடன் வரிசை வரிசையாக நின்று கைகளைக் கூப்பிக் கும்பிடும் போது, வழக்கப்படி வைதாளிகர்கள் (துதி பாடகர்கள்) அவரவர்களின் பெயரை அரசனுக்குச் சொல்ல வாரம்பித்தார்கள்.

"ராஜாதிராஜ! வந்தனம் செய்யும் இவன் இவ்வளவு லக்ஷம் அசுவ சேனைக்கு அதிகாரி. மகாப் பிரபு! இவன் இவ்வளவு லக்ஷம் யானைப்படைகளுக்கு எஜமானன். இவன் இவ்வளவு லக்ஷம் வில்லாளிகட்குத் தலைவன். இவன் இவ்வளவு லக்ஷம் குந்ததாரிகளுக்கு நாயகன். இவன் இவ்வளவு லக்ஷம் மஹாரதர்களுக்கு நாதன். இவன் இவ்வளவு லக்ஷம் கதாதாரிகளுக்கு அதிகாரி. இவன் இவ்வளவு ஆயிரம் பீரங்கிக்காரர்களுக்குத் தலைவன். இவன் இவ்வளவு பதாதிகளுக்கு எஜமானன். இவன்இவ்வளவு ஈட்டிவீரர்களுக்கு இறைவன். நமஸ்கரிக்கும் இவர் பங்காள தேசாதிபதி. இவர் களிங்க மன்னர். இவர் ஒட்ர தேசாதிபதி. இவர் மச்ச வேந்தர். இவர் அவந்தீ ராஜர். இவர் கோசல மன்னர். இவர் ஸௌராஷ்டிர பூபதி. இவர்கள் தக்ஷிணதேச பாலகர்கள். இவர்கள் பச்சிமதேச மன்னர்கள். இவன் பில்ல நாயகன்" என்று அவரவர்களுக்கு உரிய விருதுகளையும் சேனைகளின் கணக்கையும் எடுத்துக் கூறி, மீண்டும் சந்திரகுப்தனை நோக்கி "மகா ஸ்வாமீ! நமஸ்கரிக்கிறார்கள். காணிக்கைகளை ஒப்புவிக்கிறார்கள். ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ மார்த்தாண்ட சந்திரகுப்த மஹாராஜருக்கு பராக்" என்று துதி கூறினர்.

அப்பொழுது சந்திரகுப்தன் எல்லோரையும் அவரவருடைய அந்தஸ்துக்கேற்ற விடங்களில் உட்காரச் செய்து, அவர்கள் ஒப்புவித்த காணிக்கைகளை ஸ்வீகரித்துப் பொக்கிஷத்திலிருந்து உயர்ந்த வஸ்திராபரணங்களை வரவழைத்து, அவர்களுக்கு ஈந்து மரியாதை செய்து, கந்தமாலிகைகளுடன் தாம்பூலம் அளித்து, "அரசர்களே! நமது பிதாமகர் ஆதிபத்தியத்தில் உங்களுக்கிருந்த தேசாதிபத்தியத்தை இனியும் அவ்விதமே ஆண்டுவந்து, தக்கஸமயங்களில், நமக்கு வழக்கப்பிரகாரம் ஸகாயம் செய்தும், கணக்குப்படி பகுதிகளையும் கப்பங்களையும் உரிய காலங்களில் சேர்ப்பித்தும். சௌக்கியமா யிருந்து வரவேண்டியது" என்று கட்டளையிட்டான்,

பிறகு அவன் அதிகாரிகளை நோக்கி, "பாம்பரையாக நமது அரசாட்சியில் உத்யோகம் வகித்துவரும் அதிகாரிகளே! புத்தியிலும் நீதியிலும் தேவகுருவிற்கு நிகரானவரும் நமக்கு ஆப்த பந்துவும் எஜமானருமாகிய சாணக்யர், தேச மரியாதைகளின் ஸ்தாபனத்தின் பொருட்டு, நம்மிடம் மந்திரி பதத்தி லிருக்க அனுக்ரஹித்துப் பிரதான சஸ்திரத்தை ஸ்வீகரித் திருக்கிறார். அவரிட்ட கட்டளையை அரசனாகிய நானும் சிரசால் வகித்து நடக்கக் காத்திருக்கிறேன். ஆகையால் எச்சமயத்தில் அவர் எவ்விதமான உத்திரவிட்டாலும் உடனே அதை அவ்விதமே செய்து முடித்து நமக்குத் தெரியப்படுத்த வேண்டியது" என்று ஆக்ஞாபித்தனன்.

அவர்களெல்லோரும் "மஹாப் பிரஸாதம்" என்று கும்பிட்டு உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் சைன்யங்களும் மஹா ஸமுத்ரம்போல் பின்சென்றன. இது கண்டு பர்வதேசனது மந்திரி சேனாபதி முதலிய ஜனங்கள் "ஆகா! என்ன ஆச்சரியம். இவ்வளவு பலத்தோடு கூடிய நந்தர்கள் ஒரு நிமிஷத்தில் ஹதமடைந்தது தெய்வ யத்தின மன்றி மனிதச் செயலில்லை யானாலும், இச் சாணக்யரது கூரிய புத்தியே இதற்குக் காரணமாகும். அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் ஸஹாயம்செய்ததும் பெரிதல்ல. சந்திரகுப்தன் விஷயமாய் சாணக்கியர் செய்த நன்மையே நன்மை. அவர் செய்த ஸாஹஸமே ஸாஹஸம். அம்மம்மா! இதெல்லாம் உள்ளபடியே சாணக்ய ஸாஹஸ காரியமே யல்லாது யுத்தத்தின் விளைவல்ல. அவரது முயற்சியால் அரசனான சந்திரகுப்தன் வணக்கமும் பக்தியுமாய் நடந்து கொள்வதும் பெரிதல்ல. எவ்வளவு சேனைகள்! எவ்வளவு வீரர்கள்! எவ்வளவு ரதிகர்கள்! எவ்வளவு சிற்றரசர்கள்! எங்கு பார்த்தாலும் சேனை வெள்ளமாகவே இருக்கிறதே! இவ்வளவையும் யுத்தம் செய்து ஜயிப்ப தென்றால் முடியுமோ? ஆச்சரியம்! சந்திரகுப்தனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்.

பதினேழாவது அத்தியாயம்
சாணக்யன் பர்வதேய சேனைகளை அனுப்பிவிடல்.

சேனைகள் யாவும் நகரத்தின் கிழக்குத் தெற்கு பாகங்களில் இறங்கின. அப்பொழுது சாணக்கியன் சேகரனை யழைத்து, "ஐயா

சேனபதியே! நாம் சொல்லியபடியே சேனைகளை ஒன்று கூட்டி, ஸாஹஸம் செய்து நந்த ஸம்ஹாரமும் செய்து தந்தாய். பர்வத ராஜனுக்கு எப்படி ஆப்தனு யிருக்கிறுயோ அப்படியே நீ நமக்கும் ஆப்தனுக விருக்கிறுய். சத்துரு நிக்ரஹமானபின் மறுபடியும் யுத்தத்திற்கு இடமில்லே. பிரஜைக ளெல்லாம் வணங்கி விட்டார்கள். இரு பக்கத்து ஸேனைகளும் அபரிதமாயிருப்பதால் அவை ஒரே இடத்தில் தங்கியிருக்குமாயின் பிரஜைகளுக்கு க்ஷாமமும் வியாதியும் சிரமமு முண்டாய் விடும். அதனுல் அரசனுக்கும் கெடுதல். ஆகையால் பர்வதேயர்க்குக்கீழ் அடங்கிய படைகளில் உங்க ளெல்லோர்களுடைய சேனைகளினும் இப்போதைக்கு இன்றியமையாத சில சைனியங்களே மட்டும் நிறுத்திக் கொண்டு மீந்த சேனைகளேத் தத்தம் தேசங்களுக்குச் செல்லும்படி பருவதேசரிடம் சொல்லி ஏற்பாடு செய். நந்த ராஜ்யத்திற் பாதியைப் பர்வதேசனுக்கு நாம் கொடுக்கும்போது அதற்கேற்றபடி சைனியங்களேயும் வகுத்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்லி, விலே மதிக்க முடியாத பீதாம்பரங்கள் ஆபரணங்கள் இவைகளே வரவழைத்துச் சேகரனுக்கும் அவன் பக்கத்திய அரசர்களுக்கும் அளித்து மரியாதை செய்து, அவர்களுக்குச் சந்தனம் புஷ்பஹாரம் கற்பூர தாம்பூலம் இவைகள் வழங்கிச் சமயோசித மொழிகளால் அவர்களே ஸந்தோஷப்படுத்தி எல்லோரையும் அனுப்பினுன்.

சேகரன் தனக்குக்கொடுத்த வஸ்திராபரணங்களேப் பருவதேசன் முன் வைத்து, சாணக்யன் உரைத்த சமாசாரங்களேயும் தெரிவித்தான். அதுகேட்டு அரசன், "ஐய! சேனபதியே! சாணக்யர் சொன்ன விஷயங்கள் உண்மையே. அவ்விதமே நமது சேனைகளே யனுப்பிவிடு. நம்முடன் வந்திருக்கும் அரசர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இது விஷயத்தைத் தெரியப்படுத்து. சாணக்யர் ஸந்தோஷத்துடன் உனக்களித்திருக்கும் வெகுமதிகளே நீயே எடுத்துக் கொள்" என்று சொன்னுன். "உத்தரவு" என்று சேகரன் படைகளிருக்குமிடம் வந்து, சிறிது சேனையை மட்டும் நிறுத்திக் கொண்டு மற்றவற்றைத் தத்தம் தேசம் செல்லும்படி கட்டளேயிட்டான். உடனே பிரயாண பேரிகைகளே முழக்கிக்கொண்டு பருவதேசனது படைகள் தத்தம் தேசம் சென்றன. இது கண்டு சாணக்யன் "சந்திரகுப்தனது ராஜ்யாபிஷேகத்திற்குப் பாதி விக்கினம் நீங்கிற்று. இன்னும் பாதிக்கு என்ன செய்யலாம்?" என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்)

வி. பாலம்மாள்.

இந்தியா மந்திரியாகிய மகாகனம்
E. S. மாண்டெகு அவர்களுக்கு நல்வரவு.

நீடாழி வையமெலாம் நீதிமுறைதவறாது நேயச் செங்கோல்
கோடாது காக்குமன ஜார்ஜ் அரசன் கண்டறிந்த கொள்கைக் கேற்ப,
வாடாத சூழ்ச்சியராய், வாய்மையொடு தண்ணளியும் வாய்ந்து, வஞ்சம்
நாடாத தூய்மனத்து மந்திரிமார் பலருளரால் நயத்தின் மிக்கார்.

அன்னவரில் இந்தியர்செய் அருந்தவத்தின் பெரும்பயனாய்அமைச்சர்க் கெ
முன்னவனும்அரசியலில் மூதறிவில்தண்ணளியில் முறைசேர்நீதிச் [ல்லாம்
சொன்னயத்தில் மாநிலியின் ஆயநெறி கற்றொழுகும் துணிவும்யாண்டும்
தன்னயம்போல் பிறர்நயமும் தற்காக்கும் மாண்டேகன் தர்மசீலன், (2)

"நம்மரசும் மந்திரிமார் நற்சபையும் வெகுதூரம். நம்மை யாளும்
சும்மைதனைப் பொறுப்பவரோ சுயநயமே கருதுபவர். சுட்டிக்காட்டிச்
செம்மைசெய நாமருகரல்லரெனச் செப்பிடுவார். தெரிந்தோர் சொல்லச்
சம்மதியார். தம்மனதுக் கேற்றதையாம் தடுத்துரைக்கச் சகியா ரம்மா (3)

"ஆங்கிலநன் னாட்டாரும் அயல்நாட்டு நண்பர்களும் ஆன்றகேள்விக்
'காங்கிரசுச் சபை'யாரும் கணக்கறிந்த 'முஸ்லிம் சங்கத்தார்' தாமும்
பாங்கல இவ்வரசிய லென்றோர் மனமாய்க் கூறுவதைப் பழித்துக் கூறல்
ஆங்கரும மல்ல"வென ஆய்ந்தறிந்தான் மாண்டேகன் அமைச்சர்கோமான்.

"வையத்தார் யாவரும்தம் நாட்டுரிமை கேட்பார்.அதை வழங்கா ராயின்
வையத்தாள் செய்வரிது. வழக்கெங்கும் பொதுவன்றோ? மன்னர் யாரும்
ஐயத்தால் ஆக்கினையால் அச்சத்தால் ஆள் வதினி யாகாதன்றோ?
பையத்தா னவதவர் பாராட்டும் உரிமைகளைப் பயத்தல் நன்றே. (5)

"பாரில்தம் குடிக்குரிமை பாலியா வேந்தர்படும் பாடும் கண்டோம்
வீரத்தால் வேற்றரசர் உரிமையெலாம்தற்காக்கும் மேன்மைவாய்ந்த
காரத்தால் போர்புரியும் கணிசத்தார் இப்பரத கண்டத் தார்க்கே
ஓரத்தால் தம்நாட்டில் உரிமையளி யாரென்றால் ஒவ்வா தன்றோ? (6)

"தூரத்திற்கெட்டாது. சொற்கேட்டுச் செய்வம்எனில், சொல்வோர் எல்
ஓரத்தால் தன்னயத்தால் உள்ளபடி சொல்லமனம் ஒப்பாதாரே. [லாம்
நேரிற்தான் போய்ப்பரத நேயத்தார் சொல்வதெலாம் நெஞ்சில் வாங்கி
ஊரிற்போய்ப்பாரளிமன்றேற்பவுரைத் தரசியல்நன்குயர்த்தல்வேண்டும்"

எனத்துணிந்தே மாண்டேகன் இசைந்த சில நண்பருடன் இந்தியாவின்
மனத்துயரம் நீக்கவந்தான் மற்றவன்தன் வரவுநல் வரவேயாக.
தினைத்துணையு மிடரின்றித் தீர்க்காயு ளுடன் வாழ்ந்தித் தேயத் தாரும்
அனைத்துலகு மின்பமுற அரசமைக்கும் வகையருள்வான் அகிலநாதன். 8

சற்குரு தாசன்;
சாத்தூர்.

ஸ்ரீ: S. T. பொன்னம்பலநாத முதலியார் மீது
* வாழ்த்துக் கவி.

உலகமா தேவிக்(கு) இலகுமோர் திலக!
பலகலை யாவும் பழுதற வுணர்ந்தோய்!
தெய்வக் குழாமெனுஞ் சைவக் குழாங்கள்
தழைத்தினி தோங்கும் விழுத்தகு கைலையில்;
ஒருமான் கரத்தணிந் தொருமா உரித்தணிந்(து)
ஒருமான் சிரத்தணி பெருமான் தண்ணார்
கங்கைச் சடையன் மங்கை பங்குடையோன்
இன்னருள் பெற்ற நன்னய குணமும்,
காராள கோத்திரச் சீரான் வாழ்க்கையும்,
பாரா ளரசர் பகர்ந்திடு சீலமும்,
கற்றவர்க் குதவும் நற்றவ முடைமையும்,
மாற்றலர் கண்டு போற்றிடு தீரமும்,
முத்தமிழுணர்ந்த முழுப்பெருந் தகைமையும்
சத்துவ குணமுந் தங்குநல் தரும!
ஓதிய நூலின் உயர்ஒழுக் கத்தோய்!
தொல்புகழ் சிறுறு தொண்டை மண்டல
முதன்மையார் தவத்தாற் றலைமையா யுதித்தோய்!
கோட்டமில் குணத்தோய்! குடந்த மிக்குடையோய்!
மங்களந் தோயும் மணம்பெறு கோலம்,
இங்கிதந் தோயும் இசைபெறு செல்வம்,
தங்கு வைகுந்தத் தலத்தினி துதித்தோய்!
உள்ளும் புறம்பும் ஒருமன முடையோய்!
சொற்றிற முடையோய்! பற்றினர்க் குடையோய்!
நீதியிற் சிறந்த நின்மல நிபுண!
செல்வப் பெருக்கிற் சிறந்தசீ மானே!
நல்வழி நன்னிலை நாட்டி நிற்கின்றோய்!
பல்வளப் பொன்னம் பலநா தமுனே!

[இது ஸ்ரீமத் முதலியாரவர்கள் சிவமத தேவஸ்தானங் கமிட்டி மெம்பராக நியமனஞ்செய்யப்பட்ட நேர்மையால், ஸ்ரீ வைகுந்த மாநகர்க்கண் கூடிய மஹா ஜனக்கூட்டத்தில் பாடியது.

நின்பெருந் தகைமை யின்புற வுணர்ந்து
சிவகமிட் டிக்குச் செயம்பெறச் செய்யும்
தவமுடை யோனெனத் தனித்(து)இனி(து) எடுத்துக்
காதலைக் கொளச்சிவ கமிட்டியின் மெம்பர்
வேலையைத் தந்தநெல் வேலியின் ஜில்லா
நீதி பதியாய் நிகழ்எட் ஜிங்டன்
குலமனை மக்களுங் குதூகல மாக
சித்தமா செறிந்து பொய்ம்மை தீர்ந்திடும்
விச்சை சாலவும் வியப்ப துணர்ந்து
சொல்லினுஞ் செயலினும் நல்லவை யறிந்தும்
முறைபிற ழாமற் குறைவற நடத்தும்
நன்மக னாக நின்னையே கண்டுளோம்.
நடுவுநின் றிருத்தலான் நன்மை பல்பெற்று
நலம்பெறு நின்றன் வலம்பெறு குடும்பமும்
நீடூழி காலம் நிலைபெற வாழக்
கடவுளின் செய்ய வடி வணங்குவமே.

E.S. கண்ணபிரான் பிள்ளை,
ஸ்ரீவைகுண்டம் கலாசாலைப் பண்டிதர்.

மௌனதேசிகர்

ஓர் ஹாஸ்ய நாடகம்.

காட்சி—5.

இடம்.—ஒருதெரு; காலம்.—காலை; பாத்திரங்கள்.—தந்திரதீரன் நல்லகண்ணுக்கோன்.

தந். (அதிவேகமாகச் சோற்றுமூட்டையுடன் வேலைதேடிச் செல்லும் ஓர் ஒற்றைக்கண்ணனை நோக்கி; தனக்குள்) இவன் முகமே 'சர்வமுட்டாள் இவன்' என்று சொல்லுகிறது. இந்த உம்மணு மூஞ்சி நம் காரியத்திற்கு உபயோகப் பட்டாலும் படலாம். ஆதியில் காளிதாஸன் இருந்ததுபோல் இவனும் இருக்கிறான். அப்பொழுது அவனைக்கொண்டு வித்வான்கள் காரியசித்தி பெற்றதுபோல், நாமும் இவனைக் கொண்டு

பெறக்கூடுமென்றே எண்ணுகிறேன். பார்ப்போம். (வெளிப் படையாய்) ஏய்! ஒன்னெத்தாண்டா. ஒன் பேரென்னடா?

நல். சாமி! என்பேரா? நல்லகண்ணுக்கோனு: என்னாத்துக்குக் கேக்கறிங்க?

தங். எங்கேடா ரொம்ப வேகமாய் போரே?

நல். சாமி! வவுரு, புள்ளெகுட்டிக இக்குதில்லே? பொளெக்கத் தான் இப்படிப் போரேனுங்க எங்கப்பா. ஏன்? ஏன்ன செய்யணும்?

தங். நீ யென்ன வேலே செய்யறது?

நொண்டிச் சிந்து.

நல். ஆடுமேய்க்கும் கோனுன் ஐயா—நல்லா
ஆடுகளெ மேச்சுவந்தேன் காடுகளிலே.
ஐயையோ அதுவும்போச்சே—எங்கிட்டோ
ஐயமாரும் கூடிச்சண்டை செய்யுராகளாம்
பட்டாளக் காரருக்கா—முதலாளி
பட்டிமு ழுதும்வித்து விட்டானையா
வேறொரு வேலெயில்லெ—அதுனுலே
வேலெதேடி அலெயுறேன் கால மேமுதல்
நல்லகண்ணுக் கோனுருநான்—ஐயா
நல்லாநான் செஞ்சுடுவேன் செல்லுமெதையும். (ஆடு)

தெம்மாங்கு:

பாட்டுக்க பாடிடுவேன்—நான்
பர்த்தவேசம் போட்டிடுவேன்
மேட்டே மண் வெட்டியாலே—நான்
வெட்டி டுவேன் சீக்கிரமாய்
கேணீது ருவெடுப்பேன்—நான்
கேப்பேன் சொன்ன வேலேகளெ
கோணிகள் தைப்பேன்நல்ல—கண்ணுக்
கோனுன்கூறி சொல்லீடுவேன்
ஆடச்சொன்னு ஆடிடுவேன்—கூத்
தாடுவேன் கோமாளீபோல
ஓடச்சொன்னு ஓடிடுவேன்—நான்
காடுசெடி யானுலு மே.

ஆமா் சாமி. நான் சாமியாடுவேன். வேசம்போடுவேன். ஒண்ணுமில்லாப் போனப் பாட்டுப் படிப்பேன். கேணி துருவை எடுப்பேன். எண்ணு வேலையும் செய்வேன்.

தந். (தனக்குள்) பேஷ்! நாம் நினைத்தது முடியும்போல் இருக்கிறதே. (வெளிப்படையாய்) அப்படியா? எல்லாவேலையும் ஒனக்குத் தெரியுமாக்கும்? இருக்கட்டும். நான் ஒருவேலை தர்ரேன். ஒன்னால் செய்ய முடியுமா?

நல். அதென்ன வேலை?

தந். அவசரப்படாதே. சொல்ரேன். அதைமட்டும் நீ சரியாய்ச் செய்தால், நல்லாப் பணந்தருவேன்.

நல்ல. அடேப்பா! நேக்குப்பணந்தாலா குறி. எந்தவேலை செஞ்சா சாத்தான் என்ன? லவுக்குன்னு சொல்லுங்க சேதியை. இந்தா செஞ்சுடரேன்.

தந். (சிரிப்புடன்) அடே! நீ வெட்டக் கொத்த வேண்டாம்டா. நீ செய்யவேண்டிய தெல்லாம், பேசாதே வாயெ மூடிக்கிண்டு இருக்கவேண்டியதுதான். நல்லாக்கேளு சொல்ரதெ. இங்கே ஒரு சாடைகாட்டி வந்திருக்கான்.

நல். சரி.

தந். அவன் ஏதாவது சாடை காட்டுவான்.

நல். காட்டட்டும்.

தந். சிரிக்கக் கிரிக்கப் படாது.

நல். இல்லே.

தந். நீயும் அவனுக் கேத்தாப்போல் சாடை காட்டணும்.

நல். இம்புட்டுத்தானே?

தந். அவசரப்படாதே. வாா்த்தைமாத்திரம் தொரந்துடாதே. தொரந்தியோ, போச்சு காரியம். உம்—தெரியுமா?

நல். நல்லாச் சொன்னீங்க. முன்னக் கூட்டிச் சொல்லீட்டாக் கூடவா தெரியாது?

தந். ஆமடா. ஒன்னாலே இதுமுடியுமா? சாடையாலேயே பதில் சொல்லணுமே?

நல். ஹூம்—இதாலா தெரியாது? அவேன் காலெக் காமிச்சா நான் கையைக் காமிக்கிறேன். அவன் மூக்கெக் காட்டினா

நான் நாக்கெக் காட்டரேன். மவா வித்தையோ இந்த ஊமெப் பயக சாடை?

தந். (சிரிப்பை அடக்கி) ஆமடா நல்லகண்ணு! நீசொல்லிப்புட்டே, ஒன்சாடை அவனுக்குத் தெரியாட்டா நீஎன்னடாசெய்வே?

நல். அப்ப! குடிமுளுகிப் போச்சாக்கும்? என்சாடை தெரியாட்டி ஒன்சாடையும் நேக்குத் தெரியல்லேனுடரேன். அப்பப் பேசவழி யெங்கே? சொல்லுங்கய்யா.

தந். பேஷ்! நீதான் தகுந்த ஆள். வா போவோம். அங்கே உன் வாயை மாத்திரம் தெறக்காதே. ஆமா. ஜாக்கிரதை.

நல். சாமி! தெரியுங்க. ஒருதரம் சொன்னுக்கே புடிச்சுக்கிட மாட்டேன்? தெரியுங்க. போவோம். [போகின்றனர்]

[நல்லகண்ணுக்கோன் தன் சோற்றுமூட்டையை இடுப்பில் வைத்துக் கட்டிக்கொண்டு செல்கிறான்.]

(காட்சி முடிகிறது.)

காட்சி—6

இடம்.—கலாசாலை; காலம்.—பிற்பகல்; பாத்திரங்கள்—ஸமிக்ஞா நாதன், மௌனதேசிகன் (நல்லகண்ணுக்கோன்,) தந்திரதீரன் பிரபுக்கள் முதலியோர்.

[வித்யாபூஷணன் முதலியோர் உட்கார்ந்திருக்கின்றனர். சமிக்ஞாநாதனும் அவனது பரிவாரமும் வருகிறார்கள். அவர்களை வித்யாபூஷணன் உபசரித்து அமரச் செய்கிறான்]

சமி. தேசிகரது வரவைப் பற்றிய உங்கள் கடிதம் கிடைத்தவுடன் எனக்குண்டான சந்தோஷத்தை என்ன வென்று சொல்வேன்.

வித். இத்தனைநாள் நீங்கள் இங்கு வீணில் தாமதிக்க நேர்ந்ததால் எங்களுக்கிருந்த வருத்தம் இவ்வள வவ்வள வில்லை.

சமி. உண்மையில் என்க்கு ஒரு சிரமமுமில்லை. இன்றுவது சுப சமாசார மெட்டியதே.—பாருங்கள்! 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' என்பது எவ்வளவு சரியாயிருக்கிறது!

தந். ஆமாம். "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கரு

மங்கள் ஆகா" என்றுதெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? எதற்கும் வேளை வரவேண்டுமோ இல்லையோ?

[சேவகன் ஒருவன் ஓடிவந்து தந்திர தீரன்காதில் ஏதோ சொல்லுகிறான்]

பிரபு! புறப்பட்டு விட்டாராம் நம் தேசிகர் வீட்டை விட்டு. நான்போய், வரவேற்று அழைத்துவருகிறேன். (போகிறான்)

வித். எனக்கு ஒருபெரிய கவலையா யிருந்தது.—'எங்கே தாங்கள் எங்களைப்பற்றி வேறு விதமாக எண்ணிக் கொண்டு விடுவீர்களோ' என்று எங்கட்கு யோசனையா யிருந்தது. நல்ல வேளையாய்—

தந். (சமிக்ஞாநாதனைநோக்கி) பிரபு! இவர்கள்தான் எங்களுடைய வித்வசிரோமணி மௌனதேசிகர். (நல்லகண்ணுக்கோனை நோக்கி) தேசிகரே! இவர்கள்தான் நமது சோழ ராஜ தூதரும் ஸ்தானதிபதியுமான ஸமிக்ஞாநாதர்.

[நல்லகண்ணு தன் தலையை 'சரிதான்' என்று சொல்லும் பாவனையாக ஆட்டுகிறான். இருவரையும் எதிரெதிரே வீற்றிருக்கச் செய்கின்றனர், வித்யா பூஷணனும் தந்திரதீரனும்]

வித். பிரபு! இனித் தாராளமாய் அவருடன் மோன சல்லாபத்திற்கு ஆரம்பிக்கலாம்.

[சமிக்ஞாநாதன் சந்தோஷத்துடன் ஒரு விரலைக் காட்டுகிறான். மௌனதேசிகன் தன் இரண்டு விரல்களை அவனுக்கெதிரே அசைத்தசைத்துக் காட்டுகிறான்,

சமிக்ஞாநாதன் சிறிது யோசித்துத் தன் மூன்று விரல்களைக் காட்டுகின்றான்.

மௌனதேசிகன் இகழ்ச்சியும்வெறுப்பும் கோபமும் தோன்ற ஆள் காட்டி விரலை அசைத்துப் பின் நான்கு திக்கும் சுற்றிப் பார்த்து சமிக்ஞாநாதன் முகத்துக் கெதிரில் நாலு விரல்களைக் காட்டுகிறான்.

சமிக்ஞாநாதன் நெடுநேரம் யோசித்து, தனது ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டுகிறான்.

மௌனதேசிகன் ஆத்திரத்துடன் தன் கை விரல்கள் ஐந்தையும் அவன் முகத்திற்கெதிரே மடக்கிக் கொண்டு போகிறான்,

சமிக்ஞாநாதன் சந்தோஷத்துடன் தன் கையிலிருந்த ஒரு சீப்பு வாழைப்பழத்தைப் பிய்த்துச் சில பழங்களை அவன் முன் வைக்கிறான்.

மௌனதேசிகன் சற்றும் தாமதியாமலும் கன ஆத்திரத்துடனும் தான் கொண்டு வந்த கட்டுச்சோற்றை அவிழ்த்து, அதில் இரண்டொரு பிடி சோறு சமிக்ஞாநாதனுக் கெதிரில் பரபரப்புடன் போடுகிறான்.

சமிக்ஞாநாதன் இது கண்டு அடங்கா மகிழ்ச்சியும் திருப்தியுமுற்று மௌனதேசிகனை வணங்கிக் கும்பிடுகிறான். பிறகு]

சமி. போதும் பரீக்ஷை. எல்லாருக்கும் வந்தனம். ரொம்பத் திருப்தி. போய் வருகிறேன்.

தந். தேசிகர்வாள்! வாங்கோ நாம் இப்படிப் போவோம்.

[எல்லாரும் பிரிந்து வெவ்வேறு இடம் செல்கின்றனர்.]

(காட்சி முடிகிறது.)

காட்சி—7.

இடம்—சமிக்ஞாநாதன் விடுதி. காலம்—முற்பகல். பாத்திரங்கள்—சமிக்ஞாநாதன் முதலியோரும், வித்யாபூஷணன் முதலிய பண்டிதர்களும்.

[சமிக்ஞாநாதன் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறான். வித்யாபூஷணன் முதலியோர் அவன் விடுதி வாயிலிலிருந்தபடியே ஓர் சேவகன் மூலம் தங்கள் வருகையை அவனுக்கு அறிவிக்கின்றனர். சமிக்ஞாநாதன் தக்க உடை தரித்துக்கொண்டு சேவகனை நோக்கி 'சரி' வரச்சொல் என்ன, சேவகனும் அறிவிக்கிறான். யாவரும் உள்ளே செல்கின்றனர்.]

சமி. (எழுந்து) வாருங்கள்! வாருங்கள்!!

[யாவரையும் ஆசனத்தில் அமரச் செய்கிறான்.]

என்ன விசேஷம்?

வித். பிரபு! வேறொன்று மில்லை.—எங்கள் மௌனதேசிகரைப் பற்றிய தங்கள் உண்மையான அபிப்பிராயம் என்ன?

சமி. உள்ளபடியே சொல்லுகிறேன்: அவர் மகான் என்பதில் தடையேயில்லை.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை, ஆ
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய், மறைக்கப் பாலாய்,
எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்."

என்று நாமெல்லாம் துதிக்கும் தக்ஷிணாமூர்த்தியே அவர்.

தங். அப்படியா? எங்கள் பாக்கியம். பாம்பின்கால் பாம்பறியும். எங்களைப் போன்ற மூடாத்மாக்களுக்கு என்ன தெரியப் போகிறது? தாங்கள் அவர்களுடன் மௌனமாகப் பேசியறிந்துணர்ந்த விஷயங்களைக் கேட்க நாங்கள் மிகவும் ஆவலாயிருக்கிறோம். அதை அறிவிக்கலாம் என்றால் நாங்கள் அறிய வேண்டுகிறோம். தயவுசெய்து அறிவிக்கலாமோ?

சமி. தடையென்ன? அவசியம் அறிவிக்கிறேன். விஷயம் இதுதான். நான் ஈசன் ஒருவனே என்று ஒரு விரலைக் காட்டினேன். அவரோ, சற்றும் தியங்காமல், ஈசன் இரண்டாக்கும் என்று திடமாகத் தம் விரல்கள் இரண்டை அசைத்தசைத்துக் காட்டினார். அதாவது:—'ஈசன் என்பவர் உங்கள் சிவன்மாத்திரம் அல்லர். எங்கள் விஷ்ணுவை மறந்து விட்டீர்களே. சிவன் விஷ்ணு ஆகிய இருவரும் ஹிந்துக்களாகிய நமக்குத் தெய்வம்' என்றார்.

வித். (சிரித்து) அப்படியா? அவர் அரு உரு வாய்ந்தவர் என்று சொன்னாரோ என எண்ணினேன்.

சமி. அப்படியும் கொள்ளலாம். நானும் அப்படியே முதலில் நினைத்தேன்: ஆனால் பின் நிகழ்ந்தவற்றைக் கொண்டு நான் அவ்வாறு தீர்மானிக்க முடியவில்லை.

தங். வித்யாபூஷணரே! நம் யூகம் இருக்கட்டும். பிரபு சொல்லி முடிக்கட்டும்.

வித். சரி! இரண்டுவிரலைக்காட்டினார். நீங்கள் என்னசெய்தீர்கள்?

சமி. நான் சும்மா இருப்பேனோ? "அப்படித் தங்கள் அபிப்பிராய மாயின், "பிரமா—விஷ்ணு—சிவன்" என மூவர் இருக்கின்றனரே. அதற்கென்ன சொல்லுவீர்" என்று மூன்று விரல்களைக் காட்டினேன்.

தங். அதுவும் சரி. தேசிகர் என்ன செய்தார்?

சமி. அவர் ஆத்திரத்துடன், "என்ன ஐயா! இதுகூடத் தெரிய வேண்டாமா? மூவரும் ஒருவர் தானே" என்று ஒருவிரலை உயர்த்திச் சுட்டினார்.

தங். அப்புறம்?

சமி. அவர் அத்துடன் விட்டாரா? அவ்வீசன் நான்கு திக்குகளையுமே ஆடையாகத்தரித்தவன் என்று குறிப்பிக்குமாறு, நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். இது எனக்கு விளங்குகிறதோ இல்லையோ, என்று அவர்க்குச் சந்தேகம் வந்து விட்டது போலும்—ஏனெனில், நாலுதிக்கையும் சுற்றிப் பார்த்ததோடு, அவர் நான்கு விரல்களையும் நீட்டிஉயர்த்தி அசைத்தசைத்துக் காண்பித்தார். உடனே நான், "நீர் சொல்வது எனக்கு விளங்குகிறது. திகம்பரரான அவ் ஈசுவரனைப்பஞ்சேந்திரியங்களான ஐவர் அணுகவும் காணவும் ஒட்டாமற் செய்து வருகின்றனரே" என்று ஐந்துவிரல்களைக் காட்டி நின்றேன்.

தங். அதற்கவர் என்ன செய்தார்?

சமி. ஐயா! பலே ஆசாமி அவர். எல்லாவற்றிற்கும் சரியான பதில் தயாராய் வைத்திருக்கிறார். அவர் "பூ இதற்குத் தானா யோசனை?" என்று இகழ்ச்சிக்குறி காட்டி, அதி ஆத்திரத்துடன் "பஞ்சேந்திரியங்களாகிய இவ்வைந்து முரடர்களையும், சுயேச்சையாய்த் திரியவொட்டாமல் அடக்கிவிட்டால் கடவுளை எளிதிற் காணலாமே" என உணர்த்த, தம் ஐந்து விரல்களையும் மடக்கி இறுக்கிக் காட்டினார்.

வித். நன்று நன்று! அப்புறம்?

சமி. சிறிதுநேரம் யோசித்தேன், வேறு என்ன சொல்லலாமென்று. பிறகு நான் கொண்டுவந்திருந்த சிறு மூட்டையிலிருந்து ஒரு சீப்பு வாழைப்பழம் எடுத்து, அதில் சிலவற்றைப் பிய்த்து, மேஜைமேல் வைத்தேன். நான் இவ்வாறு செய்ததன் நோக்கம் யாதெனில், சர்வ கல்யாண குண சீலனையும் ஸர்வஜகத் ரக்ஷகனையும், அணுரூப மகாரூப விச்வரூபனையும் உள்ள நித்தியானந்தனை ஈசுவரனை உள்ள

படி அறிந்த அவர்க்கு, சிறு காணிக்கையாக இப்பழம் பயன் படட்டும் என்பதே.

தந். நம் தேசிகர் நினைத்துச் செய்ததென்ன?

சமி. நான் பழத்தை எடுத்து வைத்தும் வைக்காததும் இருக்கும் போதே, சரசர வென்று ஒருசிறு மூட்டையை அவிழ்த்து, இரண்டொரு கவளம் எடுத்து என்முன் வைத்து அதனைப் பெறுமாறு கட்டளையிட்டனர். பெருமாளுக்கு ஆராதனம் செய்யப்பட்ட புளியோதரை போலும் அது. இத் திருப் பிரசாதத்தைச் சிற்சில காரணங்கள்பற்றி உண்ணப்பிரியமில்லை. ஆயினும் அத்தனை பெரியவர் பார்த்து என்னை லக்ஷியம் செய்து கொடுக்கிறபோது எடுத்துக் கொள்ளாவிடில் அவரை அவமரியாதை செய்ததுபோல் ஆகுமென எண்ணி எடுத்துக்கொண்டேன். பிரசாதத்தைப் பெற்றதும், அவரது ஆசீர்வாதமும் பெறுமாறு தலை வணங்கிக் கும்பிட்டேன். பிறகு எனக்கென்ன அங்கேஜோலி? நான் வந்த காரியமோ வெகு திருப்தியாய் முடிந்து விட்டது. புறப்பட்டுவிட்டேன் அங்கிருந்து.—உங்கள் ஆர்த்தபாவமும் மனோபாவமும் இவைகளே

வித். விஷயம் வெகு திருப்தியாக முடிந்ததறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். உபசாரக் குறைவு ஏதேனும் இருக்குமாயின், எங்கள் அபசாரங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறோம்—தங்களைப் போன்ற பெரியோர்கள் வரவு துர்லபம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டமே நீங்கள் இங்குற்றது. எங்கள் தாழ்மையான வந்தனத்தை மகாராஜாவுக்கு அறிவிக்க வேண்டுகிறோம். குற்றங் குறைகளிருப்பினும், அவற்றைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறோம்.

[வணங்குகிறார்கள்.]

சமி. (கையமர்த்தி) நன்றாயிருக்கிறது. ஒரு குற்றமும் இல்லை. உங்கள் அன்பையும் உபசாரத்தையும் ஒருபோதும் மறவேன். தேசிகரும், கலாசாலையும் அந்த நட்டத்தும் தாங்களும், யாவரும் நீடு வாழ்க. யான் இன்று மாலை மதுரை போயே என் ஊருக்குப் போவேன். உங்கள் மகாராஜாவுக்கு நிகழ்ந்த யாவும் ஒன்றுவிடாமல் அறிவிப்பேன். உங்கள் விசுவாசத்தையும் ராஜபக்தியையும் அவசியம் தெரியப்படுத்துவேன்.

[எல்லோரும் வந்தனம் செய்து வழி யனுப்பித் திரும்புகின்றனர்.]

(காட்சி முடிகிறது.)

ம. கோ.

விடுகதை வினாவுக்கு விடை.

(1) நல்அரங்க சாமி நவின்றவினு விற்குவிடை
எல்லவரும் ஓர இயம்புகேன்—வல்லபுகழ்
நாவலர்கள் போற்றுகின்ற ஞானவிவே கோதயமே!
'கோவி(ல்)' என, நீயவற்குக் கூறு.

இ. ஸ்ரீ கோவிந்தன், இளசை.

---

(2) மேதகுஅ ரங்கசா மிக்குவிடை தக்கவிவே
கோதயமே "கோவி"லெனக் கூறு.

வீர. சு. பழனியப்பசெட்டி.

'மூன்றெழுத்துச் சொல்'கோவில்'. முன்எழுத்தின் றேல்'வில்'ஆம்.
என்றஇரண் டாவதிலை யேல்'கோல்'ஆம்—மூன்றிரண்டும்
இல்லையேல் ஆகும்'கோ' "என்றரங்க சாமிக்கு
நல்லவிவே கோதயமே! நாட்டு.

சு. ராம. பழனியப்பச்செட்டி,
சொக்கலிங்கம்புத்தூர்.

கண்ணுடு கடலுலகிற் கண்மணியாய் நந்தமிழுங் கவினயாரும்
உண்ணுடி யுளத்திருத்தி மகிழ்கூர விடுகதையை யுரைத்த ஐயா
மண்ணுட்டுக் கோவொன்ருய் மனம்நாட்டி நிலையமுற வைத்தார் முந்தை
கண்ணுட்டிக் கோவிலெனக் கருதரங்க சாமியெனுங் கலைவலோனே.

சு. முரு. ராமசாமிபிள்ளை.

(5) கார்முகமே வில்லாம். கருதிற்கோல் அம்பரமே.
ஏர்முகத்துக் கோவே இறைவனும்—சீர்முகத்து
நண்பநீ சொன்ன நலத்த விடுகதைக்
கெண்பெறுங் கோவிலென வெண்.

ம. வெ. சிவசுப்பிரமணிய ஐயர், குன்னூர்.

---

(6) மூன்றெழுத்துச் சொல்'கோவில்' முன்னிலதேல் 'வில்'ஆகும்
என்றஇரண்டாவதின்றேல் எய்'கோல்' ஆம் —மூன்றிரண்டும்
இல்லையேற் 'கோ'வென் றெழுத்துவிவே கோதயமே!
சொல்அரங்க சாமிமுன்இச் சொல்.

ப. க். வீரப்பமுதலியார், உன்னியூர்.

(7) சீர்த்திகைமே லாக்கலுறுந் தெய்வத் தகைமையுயர்
கார்த்திகைமேற் கண்டவிவே கோதயமே—நேர்த்தியுள
பாவிற் பொருடேரும் பண்பரங்க சாமிக்குக்
கோவி(ல்)என்றே நீயெடுத்துக் கூறு.

கு. ஆறுமுகம் பிள்ளை, காலாபஸ்தி, இரங்கோன்.

---

(8) தேயமெலாம் ஞானவொளி தேக்குவிவே கோதயமே!
போயவிருச்சிகப்பேர் பூண்மதியில்—ஆயவந்த
நல்லவினு விற்குவிடை நாத னுரை"கோவில்"
சொல்லரங்க சாமிக்கிச் சொல்.

*திருஞானசம்பந்தன்.

(9) தூய விருச்சிகப்பேர் துன்னுமதிச் சஞ்சிகையிற்
சாயல் பெறஅரங்க சாமியினைத்—தாயவிட்ட
தாவில் விடுகதைக்குத் தாரணியோர் தாம்போற்றுங்
'கோவில்' விடையென்பேன் கொண்டு

*கோ. சேஷாத்திரி.

(10) மின்னுவிவே கோதயமே! மேற்கார்த் திகைமாதந்
தன்னில் வெளிவந்த சஞ்சிகையிற்—பன்னுசெஞ்சொல்
மன் அரங்க சாமி வரைந்த வினவிற்குத்
துன்னுவிடை கோவி(ல்)எனச் சொல்.

*சு. மு. பழநியப்பன்.

(11) சீர்விவே கோதயமே! சென்ற விருச்சிகமாம்
ஏர்மதியி லேவந்த வின்வினவிற்—கோர்விடைதான்
"கோவில்". இதனைக் குணஅரங்கசாமிக்கு
நீவின் உரிமை நினைந்து.

*திரு நீலகண்டம்.

"ஆத்திசூடி வெண்பா"வைப் பற்றிய
ஐயத் தெளிவுரை.

ஸ்ரீமதி கே. எஸ். நீலாயதாக்ஷி அம்மையவர்களுக்கு,

அன்பார்ந்த சோதரி!

நம் போன்றோர்களின் வித்யாபிவிர்த்தி கருதி, பிரபல வித்வான்களாலும் விதுஷீகளாலும் விஷயதானஞ் செய்யப்பெற்று விளங்கும், "விவேகோதயம்" பெற்றுப் படிக்கும் பெரும்பேறுற்ற பெண் மக்களில் யானும் ஒருத்தி.

---

*கோனுபட்டு க.வி.கலாசாலையிற் பயிலும் 9-ஆவது வகுப்பு மாணவர்கள்.

"விவேகோதயம்" இரண்டாம் தொகுதி எ-வது பகுதியில், ஸ்ரீமதி அசலாம்பிகை யம்மை எழுதி வெளியிட்டுவரும் "ஆத்திசூடி வெண்பா" சம்பந்தமாக சில ஐயப்பாடுகள் உமக்குத் தோன்றிய தறிந்தேன். அவை தமிழிற் போதிய அறிவில்லா எம்போலியர்க்கே தெளிவாகப் புலப்படக் கூடியவைகளாக இருக்க, பன்னூல்கள் படித்துப் பல விஷயங்கள் அறிந்ததாக வெளியிட்டிருக்கும் உமக்கு ஐயப்பாட்டுக் கிடனாயது வியப்பே. எனது சிற்றறிவுக் கெட்டிய மட்டில் இப்பத்திரிகை மூலமாகவே நும் கேள்விகளுக்கு விடை கூறுகிறேன்.

1. "இராமபாரதியார் இயற்றியதும், அசலாம்பிகை அம்மை இயற்றியதும், பெயர் வேறுபாடின்றி ஒரு பொருள்மேற் கூறப்பட்ட இருவேறு நூல்களாயிருத்தல் மயக்கத்திற் கிடனாகாதா?" என்கிறீர். எவ்வாறாகும்? வடமொழியில், வசிஷ்டர், போதாயனர், வால்மீகி முதலியோரும், தமிழில் கம்பர் ஒட்டக்கூத்தர் முதலியோரும், "இராமாயண"மும்; வடமொழியில் வியாஸர், ஜயிமினி முதலியோரும், தமிழில் பெருந்தேவனார் நல்லாப் பிள்ளை அரங்கநாதக் கவிராயர் முதலியோரும் பாரதமும் பாடவில்லையா? அந்நூல்கள் ஒன்றினொன்றை வேறுபடுத்தி யறிதற்காக அவ்வந் நூலாசிரியர் பெயரை விசேஷணமாகப் பெற்று, பிறிதொரு வேறுபாடுமின்றி, "இராமாயணம்" "பாரதம்" என்றே வழங்கப் பெறவில்லையா? அவ்விசேஷணங்களும் பிறர் கலந்தனவன்றி, நூலாசிரியரே அமைத்துக் கொண்டனவோ? இக்காரணங்களால், அசலாம்பிகையம்மை யவர்கள் நூலை "ஆத்திசூடி வெண்பா" என வழங்கியது குற்றமாகாமை காண்க.

"திருவள்ளுவர் குறளை பின்னடிகளாக அமைத்துப்பாடிய வெண்பா நூல்கள் பல்வேறு பெயர்கள் பெறவில்லையா?" என்கிறீர். அவை வெண்பாவின் முற்பாதியிற் குறிப்பிட்ட ஒருபொருளை விளிப்பதாக அமைக்கப் பெற்றும், அக்காரணத்தால் ஒவ்வொரு நூலும் தம்முள் வேறுபட்டும் இருத்தலால், அவை வேறுவேறு பெயரிட்டு அழைக்கப்பட்டது பொருத்தமே. இவ்விரு ஆத்திசூடி வெண்பாக்களும், அவ் வேற்றுமை பெறவில்லையே! இருவர் நூலாசிரியரும், வெண்பாவின் இறுதியில், இயைபு நோக்கி ஆத்திசூடி யடிகளைச் சிறிது வேறுபாடு தோன்ற அமைத்தனர். பாரதியார் புன்னை வனநாதனை விளித்தனர். அம்மையார் ஒருவரையும் விளித்திலர். பாரதியாரது நூலைப் "புன்னைவனநாத வெண்பா" என்றழைக்கலாமாயினும், அம்மையாரது நூலை அவ்வாறு வேறுபெயரிட்டு அழைப்பதற்குஇடமில்லையே. ஆகவே, அவ்வந் நூற்பெயர் அமைந்தவாறு, இருந்தவாறு இருப்பதே பொருத்தமாக மதிக்கப்படுதல் காண்க.

2 இந்நூலின் முதலாஞ் செய்யுளில் "நாடிழந்து" என அமங்கலமொழி வரலாமா?" என்கிறீர். யான் அறிந்த பாட்டியல் இலக்கணம் கூறும் நூல்களில் ஒன்றிலேனும் "நாடு" என்னுஞ்சொல் அமங்கலச் சொல்லாகக் குறிக்கப்படவில்லை. முதற்சீர் முழுதும் ஒருமொழியாய், அம்மொழி அமங்கலமாயிருப்பின் குற்றமாமெனக் கல்வி கேள்விகளில் மிக்கோர் வாய்க் கேட்டிருக்கிறேன். இங்கு, முதற்சீர் இருமொழியாகவும், அவற்றுள் முன்னது மங்கலமொழி யாகவும் அமைந்திருத்தலால் அது குற்ற மாகாமை காண்க.

ஒரு செய்யுளுக்குப் பொருள் உரைக்குங்கால், ஐந்து வகையாற் கூறலுண்டே. சந்தர்ப்பத்தை யொட்டி, சொல்லின் ஆற்றலாற்போந்த பொரு

ளைக் கூறலும், விசேடவுரை கூறலும், வித்வத் சாமர்த்தியமன்றோ? அச் சாமர்த்தியத்தாலேயே உமக்கு ஐயப்பாட்டுக் கிடனாயிருந்த சொற்பொருள்களை அசலாம்பிகை யம்மை எளிதின் விளங்குமாறு கூறியிருக்கிறார்களென்பது, விஷம திருஷ்டியின்றிப் பார்ப்போர்க்கு நன்கு புலனாகும். (நச்சினார்க்கினியர் பரிமேலழகர், அடியார்க்குநல்லார் முதலியோர் பலவிடங்களில் அவ்வாறு உரைகூறி விளக்கியிருத்தல் காண்க.)

“பாராயணம்” என்னும் சொற்குப் பொருள் “கரையை அடைதல்” என்பது. நூல் வழக்கினும் உலக வழக்கினும் “கரை யடைதல்” அல்லது ‘கரை காணுதல்’ என்னும் தொடர், ‘முடிவை அடைதல்’ என்னும் பொருளில் வழங்கிவரக் காண்கின்றிலமோ? அப் பாராயணம் என்னும் மொழி இப்பொருளிற் பயிலும்பொழுது உலக வழக்கில் “முடிவை யடைதல்” என்னும் பொருளை யுணர்த்தும் நிலையிலிருந்து, ஒருநூலை ஆதியோடந்தமாகப் படிப்பதாக சங்கற்பிப்பதற்கும் வழங்கலாயிற்று. அதுவே, ஈங்கு “வேதபாரகர்களாகிய முனிவர்கள் “தெய்வம்மறைபாடி” என்னும் சந்தர்ப்பத்தில், “பாடி” என்னும் சொல்லுக்குத் தகுந்த பொருளாக அமைந்திருத்தல் உய்த்துணர்க. பிறசொற்பொருள்களையும் இம்முறையே காண்க.

(3) “அறஞ்செய விரும்பு” என்பதற்கு “பிரிவாற்றாது வந்த வேதியர்க்குத் தருமன் பிறருதவியால் அன்னமிட்டது உதகரிக்கத் தகுந்ததா?” என்கிறீர். தகுதியுடையதே. தருமன் அரசபதவியை இழந்து, ஆதரவின்றி ஆரண்ய வாசஞ் செய்யப் புறப்பட்டதும். அவனைப் பின்தொடர்ந்து அவ் வேதியர் தொடர்ந்ததும், பாரதம் படித்தோர் அறிந்ததே. அவன் நிர்க்கதியுற்றுத் தனது உணவிற்கு கந்தமூலாதிகளன்றி வேறெதும் இல்லாதிருக்கும் சமயத்தில், தனையடைந்த வேதியர் 12,000 பேர்க்கும் உணவளிக்கவே, பரிதியினருளால் “அக்ஷயபாத்திரம்” பெற்றான் என்பதுவே இங்குக் குறித்தது. தன்னைப் போஷித்தற்கே தன்வருவாய் பற்றாத காலையினும், தன்பாலுற்ற அதிதிகளை—அவர்யாவரே யாயினும்—உபசரித்து உண்பிக்க விரும்பி முயல வேண்டும் என்பதும், முயன்றால் இறைவனருளால் முயற்சி கைகூடினும் கூடும் என்பதும், அதற்கு நிதர்சனமாக இவ்வாறு உரைக்கப் பட்டதென்பதும், அறியத்தக்கது.

பாரதியார் வெண்பா ஈற்றடியின் இறுதியில் “விரும்பு” எனத் தக்கவாறு அமைத்தார். அதிற் சிறிது வேறுபாடு தோன்றவே, அசலாம்பிகை அம்மை, தாம்அமைத்த விதம் அமைத்தார் போலும்!

“ஈண்டு, வகையுளியாக அமைத்தது வழுவின்றோ”? என்கிறீர். செய்யுளிசை பிறழவருங்கால், வெண்டளை பிறழாமற் காத்தற்காகவே, வெண்பாவிற் சொற்களைப் பிரித்து வகையுளியாக அமைத்தல் குற்றமாகாது. அறஞ்செய—விரும்பென்—றமை என்று தளைபிரித்தால், வெண்டளைக்கு விரோதமாதலின், அறஞ்செயவி—ரும்பென்—றமை எனப்பிரித்ததென்ன அறிக. செய்யுளியல் செய்த பல ஆசிரியர் கருத்துக்கும் விரோதமாக அசலாம்பிகையம்மை நீர் ஐயுறுகிறபடி தவறிழைத்திலர்.

“அறஞ்செய விரும்பு” முதலியன சூத்திரமே. வாக்கியமாகவும் கூறலாகும்.

“சிறுதொடர் நீதி” என்பதற்குச “சிறிய சொற்றொடரால் அமைக்கப்பெற்ற நீதி” யென்றும், “சிறிய சூத்திரங்களால் தொடர்ச்சியாக அமைக்கப்பெற்ற நீதி” என்றும் பொருள் கூறலாம்.

(4) நீர் கேட்கும் சொற்களுக்குப் பொருள் வருமாறு:—இருந்து வசித்தல்—இடம்விட்டுப் பெயராது வாழ்தல், என்னே—வியப்பையும் வினவையும் குறிக்கும் இடைச்சொல். இங்கு, வேறு வழியிற் செலுத்தும் சிந்தையரைத் தன் வழிப்படுத்தக் கருதுவோர் உபயோகிக்கும் இடைச்சொல் மாத்திரையில் நின்றது. ஒன்றுமட்டில்—ஒன்று மட்டும், முத்திவீடு—மோக்ஷம் (புத்திமதி என்றூர்போல் வழக்கிற் கலந்தது.)

தாளினைத் திறத்தல்—தாழ்க்கோலை திறந்து கதவாகிய பிரதிபந்தகத்தை நீக்கல். குறிப்பு—குறிப்புப்பொருள் (சொற்கிடக்கையிலேயே அறியப்படும் வெளிப்படையின்றி, வேறு குறிப்பின் அறியக்கிடப்பது.) பிரதிநலம்—பிரதியுபகாரம்: கைம்மாறு. தவிர—அன்றியும், (நிற்க என்றபொருளிலும் அது வரும்) வாலிபர்—இளைஞர், உட்கோள்ளல்—கருதல், மனத்தடக்குதல்; ஆகவே—அதனுல், நாளடைவில்—நாளாக நாளாக, கிரமமாக. முதன்மையாவது—முதலாகவைத்து எண்ணப்படுவது.

(5) கவிக்கழகு பொருட்சிறப்பே யன்றிச் சொல்லமைப்பன்று. மூன்றுவதெழுத் தொன்றப் பெற்ற எதுகைநயம், சொல்லைப் பற்றியதாய், பொருட் சிறப்போடு சம்பந்தியா திருத்தலால், அது சிறப்பினதாகக் கருதப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டது கவிக்குற்றம் ஒரு போதுமாகாது. "யதி வழு" என்பது, "காடு, அரிதாம்" என்பது போல், பிரிக்குங்கால், தளைகெடாதும், குற்றியலுகரப் புணர்ச்சிக்குரிய விகாரந்தருங்கால்தளைகெட்டும் வர இணைப்பது. இங்கு அக்குற்றம் இல்லை. கனம் பத்திராதிபர் அவர்கள், தமது செய்யுட்களைத் தாம்பிரித்து எழுதுவது போலவே, அசலாம்பிகையின் செய்யுட்களையும் பிறர் செய்யுட்களையும் இக்காலரீதிக்கும் நாகரீகத்திற்கும் ஏற்பப் பிரித்தெழுதித் தாம் பிரித்த தென்பதைப் புலப்படுத்த அவ்வெழுத்தை இருதலைப் பிறையினுள் அடைத்து வருகின்றூர். உய்த்து நீர் நோக்கின் உமக்கும் இது விளங்குமே.

(6) "பஞ்சவரின்" என்பதில் 'இன்' என்பது இடப்பொருளில் வந்தது. அதைப் புலப்படுத்தற்கே 'பாண்டவருள்' எனப் பொருளுரைக்கப்பட்டது.

பாஞ்சாலியை 'யாகபத்தினி' யென்றது, தருமனுக் குரியவளாயிருந்த அவ்வாண்டிலும் அவள்யாக பத்தினியுமாதலால். இவ்வாறே சபாபருவத்தில் 'ஐவருக் குரியளாகி யாகபத்தினியுமான" என வில்லி குறித்ததும் உணர்க.

(7) "தேற்றம்" என்பதற்குக் 'கருமம் முடிக்கும்' துணிவு என்பது பொருளாதலின், "தேறினான்" என்பதற்கு அசலாம்பிகை யம்மையார் கொண்டபொருள் என் இயையாததாகும்?

தருமன் கோபங் கொள்ளாமைக்குக் காரணம் மெய்ம்மைக்குத் தேய்வில தென்பதே.

(8) கோபித்தல் ஓர் கடமையாவதை, "அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்; மறத்திற்கும் அஃதே துணை" என்ற குறளாலும் அதன் உரையாலும் அறிக.

நீர் மற்றும் குறித்துள சொற்பொருள்கள் சந்தர்ப்பமும் அமைதியும் நோக்கி ஆராய்வார்க்குத், தெள்ளிதிற் புலப்படும். விவரித்துரைப்பின் "மிகைபடக் கூறலே" யாகுமென எண்ணிச் சுருக்கிக் கொண்டனன். குறை பொறுக்க. —க. மீனும்பாள், கோயம்புத்தூர்.

மகுடாபிஷேகப் பஞ்சரத்னம்

திங்கட் குடைநிகர் செங்கோல் தழைத்திடவும்
மங்களமாய் எங்கும் மகிழ்ந்திடவும்—இங்கிலாண்
டிறைவர் இறைவியுடன் இந்நாளிற் சூடும்!
நிறைமகுடம் டில்லியினில் நேர்.

நேர்மகுட மன்னரெலாம் நின்று துதித்திடவும்.
சீர்மகுட மேற்கும் சிறப்புடையார்—தார்புனையும்
சக்கர வர்த்தியுடன் சக்கர வர்த்தினிப்பேர்
மிக்க ஜியார்ஜ் மேரியென வேண்டு.

வேண்டுவதா மும்மதமும் வேழவரைக் காட்சியிலே
ஈண்டுவதைக் காணும் இயல்பாலே—ஆண்டுதொறும்
இவ்விடமே வாழ்வமெனும் எண்ணமுடன் என்னம்மை
சவ்வியமாய் நேர்ந்ததே சான்று.

சான்று யுலகுக்குச் சர்வமத சாட்சியாய்த்
தான்றாய் மதமீனும் தாரணியை—என்றோர்
இனிமையுற வாழ இகபர போகம்
தனித்தனி ஈவாரீசர்.

ஈசர்க் கடியராய் இங்கிலாண் டிறைவராய்
மாசற்ற இந்தியர்க்கோர் மாமனராய்த்—தேசுற்ற
ஐந்தா வதுஜார்ஜ் அருண்மகுடம் வாழிஎன
விந்தை நடித்தாள் விரைந்து.

A. சிவசூரிய பிள்ளை.

மைற்கல்

செவ்விய வழியிற் செல்லும் மானிடர்க்
கவ்வழி யொருபுறத் தமர்ந்தனை யாகி
வழிநடைத் தூரக் கணக்கினை மற்றவர்க்
கொழியாதுணர்த்தும் உயர்தொழில் மேவியும்,
எண்ணுமெழுத்தும் இயைதன் மையினுற்
கண்ணுடை யானெனக் கருதவும் நின்ற
மைற்கலே! நின்றன் மாசறு மாண்பினைச்
சற்றும் தவறு திற்றென உணர்த்துதற்
குற்றதோர் புலமை பெற்றவர்எவரே?
கொற்றவர் முதலாக் குடியானவர் வரை
உள்ளவர் யாரும் உனைஅறு தினமும்
நோக்கிக் காலடி போக்கிடும் பொழுதெலாம்
உன்தொழில் குறையா தூற்றி யிருப்பையால்.
ஏழை செல்வர்என் றெண்ணு தெவர்க்கும்
ஒரேவிதமாக உணர்த்துவை உண்மை.
என்னே நின்பெருமை? யார்பெற் றுள்ளார்!
சொந்தக்கார ராமெனச் சொல்லிப்
பந்தபா சத்திற் பட்டுழல் மாக்கள்
தன்மையைப் போலுனக்(கு) அன்னிய னென்றும்

உன்னை யாக்கிய ஒருவன் என்றும்எணி
ஆதியி லோர்வழி பாதியி லோர்வழி
நீதி விரோதியாய் நீநடக் கின்றிலை.
என்னே! நின்ஒழுங் கியார்பெற் றுள்ளார்?
கடும்பனி யினிலும் காற்றிலும் மழையிலும்
கொடுவெயி லினிலும் கோதில் மைற்கலே!
சலிப்பிலாத் தன்மை சாரப் பெற்றனை.
என்னே! நின்பொறை! யார்க்குள திவ்வயின்?
கொண்டநற் குறிப்பைப் பெண்கள்பால் வெளியிடல்
தீதெனக் கருதிய பேதையர் போலாது
உன்குறிப் பெவர்க்கெனும் ஒளியா துணர்த்துவை.
என்னநின் வாய்மை! இதுபோ லியார்க்குள?
நொடிக்கொரு தரமா யடிக்கடி மாறியே
நடத்திடும் மானிடர் நடத்தையை நாடாய்.
பிடிப்பினிற் சற்றும் பெயராய். இதுபெரும்
படிப்பினை யன்றோ பாருள எவர்க்கும்?
இதையா ரெண்ணுவர்? ஏளனம் செய்குவர்.
அவர்குணம் யாரே அகற்றிடச் செய்வர்?
இன்னதோர் பெருமை மன்னினர் யாரே?
தந்தையெப் படியோ,மைந்தனப் படியெனப்
புந்தியின் மிக்கோர் புகன்ற வண்ணமே
ஒழுங்குகள் யாவு மொருங்கே உள்நினைக்
கெழுசிறு புதல்வ ரின்றுமுள் ளார்கள்.
"பரீலர்ங்"கெனுமப் புண்புள மக்களும்
சர்வமு மொத்துளர். சாற்றிய குறிப்பினில்
அணுவள வேனும் அகலா திருப்பர்.
எனும்பொழு துன்மகார்க் கேதே ஒருகுறை?
மக்கள் செயலிது. மற்றும் நோக்கிடின்
தக்கநின் தோழ ராமெனச் சாற்றிடும்
மற்றுள மைற்கற் களும்தம் வண்மையிற்
சற்றும் பிசகில. உற்றநற் றோழர்
இவரேயன்றோ? எண்ணிடில் நின்போல்
தவறிலாத் தோழர் எவரே யடைந்துளார்?
குறைவிலாமக்கள் நிறையவு முள்ளாய்.
முறைபிறழ் இல்லாத் தோழரும் முறையே
நிறையவு முள்ளாய். நினக்கொரு குறைதான்
அறையவும் படுமோ? அவனியி லுள்ளார்
கறையிலா நின்குணம் காண்பரோ? இல்லை.
நின்னிற் கல்லார் நினைக்கல் என்பர்.
என்னே இவர்மதி! இன்னவர் நின்றியல்
நனிதெரிந் துன்வழி நாடிடச் செய்து
இனிதுறப் பல்கா லிருந்திடு வாயே.

A.R. ஸ்ரீனிவாச முதலியார், ஆனைமலை.

புத்தக மதிப்புரை.

வஞ்சிமா நகர்:—"வஞ்சி" என்பது 'மலைநாட்டுக் கொடுங்கோளூர்' என்று தமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு "செந்தமிழ்"ப் பத்திரிகையில் எழுதிவந்த ஸ்ரீ: ஏஸ். சோமசுந்தர பாரதியின் வியாசத்திற்கு மறுப்பாக, சேது ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. ராகவையங்கார், இராமநாதபுரம் ராஜா ஆனரபிள் ஸ்ரீ ராஜராஜேசுவர ஸேதுபதியின் விருப்பின் படி, அதே "செந்தமிழ்"ப் பத்திரிகையில் எழுதி வந்த விஷயமாகும். இதை அப் பத்திரிகை படித்தோர் அறிவர். இவ்வியாசம் இப்பொழுது "செந்தமிழ்ச் சந்தாதார் அல்லாதாரும் அறிய, ஐயங்காரால் தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டுளது. அதில் ஐயங்காரவர்கள் தமக்குக் கிடைத்த பல ஆதாரங்களைக் கொண்டு "வஞ்சி" என்பது உறையூரை அடுத்த கருவூரே என்று ஸ்தாபிக்கிறார். ஐயங்கார் கூறுங் காரணங்களும் சமாதானங்களும் மிகப் பொருத்தமுள்ளனவாகவே காணப்படுகின்றன. இதனை வாங்கிப் படித்தோர்க்கே அவர் கூறும் உண்மை இனிது விளங்கும். இதன் விலை அணா 8. வேண்டுவோர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கேனும் இயற்றியோர்க்கேனும் எழுதிப் பெறுக.

இராமாயணம்:—இப்பெயரிய ஓர் இனிய தமிழ் நவீன நாடகத்தை ஆக்கியோர், கன்னிச்சமீன் ஸம்ஸ்தானம் முத்துச்சாமிக் கவிராயரவர்களே. இதனை மதுரைப் புதுமண்டபம் புத்தகவியாபாரி இ.மா.கோபால கிருஷ்ணக் கோனார், அதன் சர்வசுதந்த்ரமும் பெற்று வெளியிட்டுள்ளார். இது தற்கால நாகரீகத்திற்கேற்ப, புதுவழியில் பலசிறந்த வர்ண மெட்டுக்களுடன் படிப்போர், நடிப்போர் யாவரும் விரும்ப, சிறந்த பாட்டுகளுடன் அமைக்கப் பெற்றுளது. எளிய நடையில் பாமரர்க்கும் பயன் படத்தக்கவாறு எழுதப்பட்டிருக்கிறது. எழுதிய கவிராயர் வால்மீகராமாயணத்தையும், கம்பராமாயணத்தையும் தழுவியே எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. சித்திரப்படங்கள் பலகொண்டு அழகாகவும் உறுதியாகவும் பைண்டு செய்யப்பட்டுளது. காகிதவிலை, ஒன்றுக்கு நான்கு உயர்ந்திருக்கும் இக் காலத்தில், நேர்த்தியாக, டிம்மி 512-பக்கங்களுடன் விளங்கும் இப் புத்தகத்தின் விலை ரூபாய் இரண்டே ஆக இருப்பது வியப்பே. வேண்டுவோர் ஸ்ரீ: கோபால கிருஷ்ணக் கோனாருக்கு எழுதிப் பெறுக.

கமலாகரன்:—இது நமது உப-பத்திராதிபர் ஸ்ரீமதி. வி. பாலம்மாள் வெளியிட்டுள்ள ஓர் சிறந்த துப்பறியும் தமிழ் நாவல். இனிய எளிய நடையில் யாவரும் மகிழ எழுதப்பட்டுள்ள இதன் போக்கு மிக நன்றாயிருக்கிறது. இதன் விலை ரூ 1. இதனை விற்ற தொகையில் ஒரு பகுதி யுத்த நிதிக்குக் கொடுபடும் என அறிவிக்கப்பட்டுளதாலும் ராஜபக்தி, தேசபக்தி மிக்க நம்மவர் அதனை வாங்கிப் படித்து மகிழ்வார்களாக. வேண்டுவோர் "ஸ்ரீ. வி. சிவராஜன், விவேகாச்ரமம், ராயப்பேட்டை, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

கதைப்பூங் கொத்து:—நமது பத்திரிகையில், சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ் சென்ற வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பி. ஏ. அவர்களின் குமாரர், ஸ்ரீ. வி. சூ. நடராஜன் எழுதிவந்த 30-கதைகளும், தனி நூலாகப் பெரிய எழுத்தில், அவரால் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் வடமொழியிலுள்ள கதா குஸும மஞ்சரி என்பதின் மொழி பெயர்ப்பு. இதன் விலை அணா-2 பை-6. வேண்டுவோர் மதுரை விவேகோதயம் ஆபீஸுக்கு எழுதிப் பெறுக. —ப-ர்.

ஓர் வேண்டுகோள்.

1 திருமங்கலத்தில் இதுகாறும் அச்சிடப்பட்டுவந்த நமது பத்திரிகை, இம்மாதம் முதல் மதுரையில், பெருமாள் தெப்பக்குளத் தெருவில், நம் பத்திரிகையின் பெயராலேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ள "விவேகோதயம் அச்சுயந்திரசாலை"யில் நடைபெறுகின்றது. பத்திரிகை பிரசுரமாகும் இடம் முதலியவற்றில் நேர்ந்த மாறுதல்களாலும், கலெக்டரது அநுமதி பெற்று அவர் குறித்த தினத்தில் டிக்ளரேஷன் செய்யவேண்டி வந்ததாலும், இம்மாதச் சஞ்சிகை வெளிவரத் தாமதமாயிற்று. இத்தாமதத்தை அன்பர்கள் பொறுக்குமாறு வேண்டுகிறோம்.

2. "'விவேகோதயம்' அச்சுயந்திரசாலை," நமது அன்பர்களின் நல்லுதவியை எதிர்பார்த்தே மதுரையில் நடைபெறுவதால், முன் "விவேகபாநு அச்சுயந்திரசாலை" மதுரையில் நடைபெற்ற காலத்தில், வெளியூர்களினின்றும் நகரத்தார் முதலியோர் ஆர்டர்கள் அனுப்பி அதனை ஆதரித்து வந்தது போல், இதனையும் ஆதரித்திடுமாறு வேண்டுகிறோம்.

3. வருகிற மாத சஞ்சிகையை அதிவிரைவில் வெளிப்படுத்த ஏற்பாடு செய்துளோம். அதுவே இவ்வருடத்திய கடைசிச் சஞ்சிகை ஆகும். மூன்றாவது வருட முதற் சஞ்சிகையை, அடுத்த சஞ்சிகை வெளியான 15-தினங்களில் வெளிப்படுத்தத் தீர்மானித்துளோம்.

4. காகிதத்தின் விலை ஒன்றுக்கு நான்காகிவிட்டது. இவ் விலை விஷமேறுவதுபோல் நாளுக்கு நாள் ஏறுமே யல்லாது, இறங்காது எனத் தெரிய வருதலால், இப்போதே நாம் வருகிற வருஷத்திற்கு வேண்டிய காகிதம் வாங்கிக் கட்டி வைத்தாலொழிய எம்மால் பத்திரிகை நடத்த இயலாது இது திண்ணம். ஆதலின் நம் சந்தாதார்க்கு எம்மிடத்தும் எம் பத்திரிகை யிடத்தும் உண்மையில் அபிமானம் இருக்குமாயின், இச் சஞ்சிகை பெற்றதும், அவர்கள் தமது மூன்றாவது வருட சந்தாவை முன்பணமாக மணியார்டர் மூலம் அனுப்புவதோடு, தம்மாலியன்ற நன்கொடைகளும் அனுப்பி உதவி புரிந்து எமது நன்றிக்குப் பாத்திரராகுமாறு வேண்டுகிறோம்.

5. குறைந்த சந்தாவிற்குத் தமக்கு அனுப்பினல் பத்திரிகைக்குப்பல சந்தாதார்களைச் சேர்த்துத் தருவதாகச் சொன்னவர்களை நம்பிப் பயனில்லாது போய்விட்டது இவர்களால் யாம் எவ்வித உதவியும் எய்திலேம். ஆதலின் இனி எவர்க்கும் குறைந்த சந்தாவிற்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. பத்திரிகையின் வருட சந்தா வழக்கப்படி மாணவர்க்கும் பெண்பாலர்க்கும் ரூ 1—8—0-ம், பிறர்க்கு ரூ 2—0—0-ம், வெளிநாடுகளுக்கு ரூ 2—4—0-ம் தான் இனமாகப் பத்திரிகை பெற்று வரும் தனதனவான்களும், பிறரும், எம் நிலைமையை உணர்ந்து, இனிப் பணம் அனுப்பியே பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகிறோம். நம் சந்தாதார்களின் உதவியாலேயே நாம் பத்திரிகை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோமாதலின், இச் சஞ்சிகை பெற்றதும் யாவரும் தம் சந்தாவை உடனே அனுப்பிப் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

காகிதப் பஞ்சமிக்க இக் காலத்தில் வீணில் பணமும் காகிதமும் செலவழிக்க எமக்கு இயலாது ஆதலின், பத்திரிகையை ஆதரிக்க விரும்புவோர் எமது வேண்டுகோளை நிறைவேற்றுவார்களென நம்பி எதிர் பார்க்கிறோம்.

—பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

"வஞ்சிமா நகர்" என்பதைப் பற்றி ஸ்ரீ எஸ். சோமசுந்தரபாரதி "செந்தமி"ழில் எழுதியதைப் படித்தபோது அதுவே உண்மைபோலிருந்தது. பிறகு ஸ்ரீ ரா. ராகவையங்கார் எழுதியதை நோக்கியபோது இது தான் சரியெனத் தோற்றியது. இப்பொழுது அதே பத்திரிகையில் ஸ்ரீ திரு நாராயணையங்கார் ஸ்வாமிகள் தர்க்க ரீதியாய் எழுதிவருவதைப் படிக்கையில் இருவர் கூறியதினும் இவர் கூற்று ஒப்பத் தக்கதாகத் தோன்றுகிறது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் இன்னும் பார்ப்போம் எப்படியேனும் உண்மை வெளியானால் சரி. ஆனால் அது எக்காலமோ!

எட்டப்ப ஞாபகார்த்த தமிழ்ச் சங்கம்:— முன்பு அறிவித்தபடியே இதன் இரண்டாவது வருஷோத்ஸவம், இம்மாதம் 21ல சனிக்கிழமை எட்டப்ப ராஜாது உயர்தர கலாசாலையில் நன்கு நடைபெற்றது. அன்று மாலை 4-மணி முதல் 5-30 மணி வரை, சங்கீத வித்வான் ஸ்ரீ. ராமசாமி ஐயங்கார் தமது இன்னிசைக் கீதத்தால் யாவரையும் மகிழ்வித்த பிறகு, சங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீ. இ. ஸ்ரீ. கோவிந்தன், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தலைவராகிய ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையருக்கு நல்வரவு கூறி, அவரை அக்கிராசனம் வகிக்க வேண்ட, அவரும் அவ்வாறே செய்தனர். பிறகு அக்கிராசனர் சபையோர்க்கு நன்றி கூறி, தமிழ் விஷயமாகவும், காலம் சென்ற மகாராஜாவின் விஷயமாகவும், அவர்கள் செய்து வரும் நற்காரியங்களை வியந்தனர்.

அநந்தரம் கடவுள் வாழ்த்துக் கூறியதும், காரியதரிசி, வருடாந்த அறிக்கை வாசித்தனர். அதில் கண்ட விஷயங்கள் திருப்திகரமாக இருந்தன. பிறகு, ஸ்ரீ கே. திருமலை, எம். நடராஜன், பார்த்தசாரதி, மீனாட்சிசுந்தரம் முதலிய நால்வரும் லீலாவதி சுலோசனுவில் ஒரு களம் நடித்தனர். இஃதானதும், "அரசன் குடிகளுக்குச் செய்ய வேண்டிய கடமை"களைப் பற்றி, ஸ்ரீ. எ. ராமகிருஷ்ணனும், "பெண் கல்வி"யைப் பற்றி ஸ்ரீ. ஜி. எஸ். குப்புசாமி, வி. கோபாலகிருஷ்ணன் ஆகிய இருவரும், தமிழிலும்; "சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ப மனிதர் இயல்பு மாறுபடும்" என்பதைப் பற்றி ஸ்ரீ. சிவசைலநாதனும், "இலவச புத்தகசாலை"யைப் பற்றி ஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணியன், வி. ஜி. குருநாதன் ஆகிய இருவரும், "பிராணிகளிடத்தன்பை"ப் பற்றி ஸ்ரீ. ஆர். சங்கரனும், ஆங்கிலத்திலும் உபந்யஸித்தனர்.

இதன்பிறகு ஸ்ரீ. பி. கறுப்பசாமித் தேவரும், ஸ்ரீ. எ. ஸ்ரீநிவாஸப் பிள்ளையும், முறையே, "தெய்வ பக்தி"யையும், "புலமை"யையும் பற்றி அழகாகப் பிரசங்கித்தனர்.

அநந்தரம் தமிழில் உபந்யஸித்த மூவரில், ஸ்ரீ. வி. கோபாலகிருஷ்ணனும், ஆங்கிலத்தில் உபந்யஸித்த நால்வரில், ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணியனும், ஆர். சங்கரனும், பிறரினும் சிறக்கப் பேசியோராகப் பஞ்சாயத்தார் அபிப்பிராயம் கூறினர். அக்கிராசனர் இம்மூவர்க்கும் தக்க நன்றி கூறிப் புத்தகப் பரிசுகள் அளித்தனர். பிறகு, அக்ராஸநர் புலமையிக்கோராகிய, ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கடிகை முத்துப்புலவர், உமறு புலவர், பழநிக்குமாரத் தம்பிரான், வேங்கடபதி ஐயங்கார், எலத்தூர் செல்லபட்டர், வீராசாமி ஐயங்கார், முத்தையப் புலவர் முதலியோரது உறைவிடமான எட்டயபுரத்தின் பெருமையை வியந்தனர். தெலுங்கு

பாஷை பேசும் தொட்டிய நாயக்க அரசர்கள், ஆரியமுந் தமிழும் வல்ல வித்வான்களை ஆதரித்து அபிமானம் காட்டி வரும் அரும் பெருங்குணத்தைப் பற்றிப் பேசினர். பிறகு அவர், சிந்தாமணி, கம்பராமாயணம், அலங்கார சாஸ்திரம முதலியவற்றில் வல்ல தற்கால எட்டப்பர், விருந்தாயினும், குமார வேங்கடேச எட்டப்பராய் விளங்குவது, தமிழ்க்கும் எட்டயபுரத்துக்கும் போந்துள்ள நற்காலத்தைக் காட்டுகிற தென நன்கெடுத்துக்காட்டினர். அநந்தரம், அவர், மகாராஜாவின் உயர்தர கலாசாலையை நடத்தும் ஸ்ரீமான் தி.கிருஷ்ணசாமி ஐயங்கார் பீ.ஏ.எல்.டி. சென்ற சென்ற இடங்களில் எல்லாம், மாணவர்கட்குள் தமிழ் அபிமானம் உதிக்கச் செய்யும் தகைமையையும், அவர் செய்து வரும் உதவியையும் கூறினர். பின்னர், ஏழை மாணவர்கள் செலவு நிர்ப்பந்தமின்றி கல்வியிற் றேர்ச்சியுற ஸ்தாபிக்கப்பட்டு நடை பெற்று வரும் கலாசாலையின் உபயோகத்தையும், அதை ஸ்தாபித்தவர்களது உதாரத்வத்தையும் உரைத்தனர். கடைசியில் அக்ராஸநர் அவர்கள், சில தமிழ் நூல்கள் இச் சங்கத்திற்கு வெகுமதி யளித்து, அச்சங்கமும் அதனைச் சார்ந்த யாவரும் நீடூழி வாழுமாறு வாழ்த்தினர். அவர் கூறிய வாழ்த்துப் பாக்கள் வருமாறு:—

சிட்டர்க்கும், சிறுவர்க்கும், தாவலர்க்கும், இரவலர்க்கும், திகழுன் பார்ந்த
இட்டர்க்கும், கவிஞர்க்கும், கிளைஞர்க்கும், ஏனையர்க்கும், என்றும் ஒட்டி
எட்டற்கிங் கிடந்தந்து, தந்தையர்போல் உதவி'நலம் இயற்ற லானே,
'எட்டப்பர் மன்னகுலம்' எனவிளங்கும அரசகுலம், என்றும் வாழி! (1)

பொருட்டிறனும் சொற்றிறனும் பொருந்தநனி போதிக்கும் புலமைசான்ற
'கிருட்டிணசாமி'ப்பெயர்கொள் நல்லாசான் வாழி!அவன் கீழ்ப்பயில்வோர்,
தெருட்டிறனுதிய பெறுக. இச்சங்கத் திற்குதவி செய்வோர், ஈசன்
அருட்டிறனுதிய பெற்று நாளுைம் மெய்ப்புகழே அணிந்துவாழி! (2)

இமைக்குங்கண் இமையாதே இருசெவியும் வேறெங்கும் இயங்கிடாதே
அமைக்குந்தண் இசைவல்ல இராமசாமிப் பெயர்கொள் அன்பன்வாழி!
நமைச்சிந்தை மகிழச்செய்தொளிர்கின்ற "எட்டப்ப ஞாபகார்த்த
தமிழ்ச்சங்கம்" வாழி! என்றும் அஃதிலகு இளசைநகர் தழைத்துவாழி!

இச்சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாய் எட்டப்பராஜரது இரண்டாவது குமாரரும், சித்திரம் வரைவதிற் சிறந்த நிபுணருமான ஸ்ரீமான் காசிவிசுவநாத பாண்டியன் அவர்கள் செய்த உதவியும், தமிழ்ச்சங்கத்திலும தமிழிலும் அவர்க்குள்ள பிரியமும் யாவரும் கூறக்கேட்டு மகிழ்ந்தோம். இப்பாண்டியனும, அவரது தந்தையாரும், முன்னிலும சங்கத்தாரின் நன்றிக்கும் தமிழ்த்தாயின் பரிபூரண ஆசீர்வாதத்திற்கும் பாத்திரராய் நீடு வாழ்க. சபைத் தலைவர், காரியதரிசி, நிதித்தலைவர், புத்தகசாலையர் முதலியோரும் தமக்கு இப்பொழுதுள்ள ஊக்கத்தைச் சோரவிடாது மேன்மேலும் உழைப்பார்களாக.

பிழை திருத்தம்.— சென்றசஞ்சிகையில் 'புதல்வர் கடமை'யில் "சந்திரசேகரன் இறந்ததும் கிருஷ்ணசாமிதவன் விசுவநாதனுக்குத் தன் மகளைக் கொடுத்து அவனை மதுரைக் கரசனாக்கினன்" என்றேம். இது தவறு. தன் தந்தையைக்கொணர்ந்த விசுவ

நாதனுக்குக் கிருஷ்ணம்நாயக்கன் காஞ்சனையைக் கல்யாணம் செய்து தந்தது மெய். ஆனால் அவனால் விசுவநாதன் மதுரைக்கரசனாகவில்லை. அவனுக்குப்பின் வந்த அச்சுதராயனது விருப்பின்படியே அவன் அரசனானது. சந்திரசேகரன் சந்ததியற்றிறந்ததும், பாண்டியவாசிகள், விசுவநாதனையே தமக்கு அரசனாக அளிக்கவேண்டுமென அச்சுதராயனை வேண்ட, அவன் அவர்கள் கோரிக்கைக்கிணங்கி விசுவநாதனை மதுரைக் கரசனாக்கினான்" என்பது சரிதம்.

பத்திராதிபர்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

இச் சஞ்சிகை பெற்றதும், விவேகோதயத்திற்குரிய மூன்றாவது வருட சந்தாவுடன் அணா எட்டுச் சேர்த்து அனுப்புவோர்க்கு ஸ்ரீமதி வி. பாலம்மாள் இயற்றி நாம் வெளியிட்டுள்ளதாகிய 1-ரூபாய் விலையுள்ள சாணக்ய ஸாஹஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரமும், அணா நான்கு அனுப்புவோர்க்குச் சேதுபதி. ஹைஸ்கூல் போதகாசிரியர் ஸ்ரீ எம் வி. ரெங்கசாமி ஐயர் இயற்றிய 12அணா விலையுள்ள "தமிழ் வியாசங்கள்" என்ற அரிய புத்தகமும் இனாமாக அனுப்புவோம். புஸ்தகமும் பெற விரும்புவோர் தாம் அனுப்பும் தொகையுடன் தபாற் கூலிக்காக ஒரு அணா சேர்த்தனுப்பல் வேண்டும்.

இனிய தமிழ் நாவல்கள்.

ரத்னபுரிரகசியம்	3–4	இந்திராணி	1—0	தலையணை மந்திரம்	0–8
கன்னியின்முத்தம்	3–0	ரங்கநாயகி	1—0	கோமளம் குமரி,	0–8
மாண்டிகிருஸ்டோ	2–8	அந்தப்புரகாதல்	1—0,	தீனதயாளு	0–6
அராபிக்கதை	2–8	தேவசுந்தரி	0–14	ஞானம்பாள்	0–6
லண்டன்திருடர்	2–4	லீலா	0–12	கமலாம்பிகை	0–5
வீரவர்மன்வெற்றி	2–0	மங்கைக்கரசி	0–12	கருணாகரன்	0–4
கனகபூஷணம்	2–0	திண்கர்சுந்தரி	0–12	ஜரத்காரு	0–4
தனபாலன்	1–8	அமீர்ஸிங்	0–12	பஞ்சதந்திரம்	0–4
ஜடாவல்லவர்	1–8	பிரேமகாந்தன்	0–12	மிருச்சகடி	0–4
நீலா	1–4	கோகிலாம்பாள்	0–12	சாகுந்தலம்	0–4
தர்மாம்பாள்	1–2	புஷ்பவனம்	0–10	வசந்தஸேனை	0–4
விநோதரசமஞ்சரி	1–2	குணசீலன்	0–10	ஸர்தார்ஸிங்	0–3
வரதசுந்தரம்	1–0	மாலினீமாதவம்	0–10	கிரிஸல்டா	0–3
வசிகரி.	1–0	வன ஜாக்ஷி	0—8	மங்களாம்பாள்	0–8
குண சுந்தரம்	1–0	சாரதாம்பாள்	0—8	அஞ்சனாக்ஷி	2–4

N. B.— வி, பி. சார்ஜ் பிரத்தியேகம. அமராவதி என்னும இனிய தமிழ் நாவலொன்றை மேற்கண்ட புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்தால் இனாமாக அனுப்பப்படும். அல்லது போஸ்டேஜுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் "அதை" இனாமாக அனுப்புவோம். எல்லாவித தமிழ் நாவல்களும் கிடைக்கும்

எஸ். ஜி. ஐயர் அன்டு கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.